# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 412

சனி, 10 ஒக்ரோபர், 2026 |

பக்கங்கள் 18

www.ilakku.org













# வன்னி விவசாயிகளுக்குப் பெரும் சவாலாக உள்ள அரச இயந்திரங்கள்: ரவிகரன்



வனவளத்திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட அரச இயந்திரங்களின் அதிகரித்த நில ஆக்கிரமிப்புக்களால் வயல் நிலத்தை துப்புரவாக்கத் தடை, வயல் நிலத்தை உழுவதற்குத் தடை, வயல் நிலத்துக்கு நீர்பாய்ச்சத் தடை, வாய்க்கால் வெட்டத்தடை என ஒவ்வொரு கட்டத்திலும் வன்னியிலுள்ள விவசாயிகள் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் கையகப்படுத்தலில் இருந்து, காணி ஆவணங்கள் ஏதுமின்றி விடுவிக்கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட 43234.98 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். பாராளுமன்றில் 07.10.2026 அன்ற உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நெற்செய்கையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களை விவாதித்து

தொடர்ச்சி: பக்கம் 16

## மூத்த அரசியல் ஆய்வாளர் சி.அ. ஜோதிலிங்கம் காலமானார்



தமிழ் தேசிய அரசியலின் முன்னணி கோட்பாட்டாளரும், மூத்த அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியுமான சி.அ. ஜோதிலிங்கம் காலமானார். வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட கட்டியொன்றை அகற்றுவதற்காக யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நீண்ட அறுவைச் சிகிச்சையின் பின்னர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பலனின்றி காலமானார்.

தமிழ் தேசிய இனத்தின் மீதான தீராத பற்றும் தளராத நம்பிக்கையுடன் மக்களின் அரசியல் விழிப்புணர்விற்காகத் தனது இறுதி மூச்சு வரை தடையின்றி சட்டத்தரணி சி.அ. ஜோதிலிங்கம் பயணித்தார்.

தொடர்ச்சி: பக்கம் 16

## அனோஜனைச் சந்தித்த இலங்கைத் தூதுவர்




மரண தண்டனை விதிக்கப்பட்டு சவுதி அரேபிய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜனின் நலன் குறித்து ஆராய்வதற்காக, சவுதி அரேபியாவுக்கானஇலங்கைத்தூதுவர்அமீர் அஜ்வாட் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, அனோஜனை சந்தித்ததாகவும், அவர் நல்ல உடல் நலத்துடன் இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார். ரியாத்திலிருந்து சுமார் 450 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சிறைச் சாலையிலேயே அனோஜன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை, சவுதி அரேபியாவுக்குச் சென்றுள்ள இலங்கையின் விசேட சட்டக் குழுவினருக்கு தூதுவர் தொலைபேசி ஊடாக அறிவித்துள்ளார். அனோஜனை

தொடர்ச்சி: பக்கம் 16

# ஜெஃப்ரி எப்ஸ்டீனுடனான தொடர்புகளை அம்பலப்படுத்திய பிரிட்டிஷ் தகவலாளர் திடீர் மரணம்!



ஜெஃப்ரி எப்ஸ்டீனுக்கும் அமெரிக்க வர்த்தகச் செயலாளர் ஹோவர்ட் லட்னிக்குக்கும் இடையே முன்னர் வெளியிடப்படாத தொடர்புகளை அம்பலப்படுத்த உதவிய ஒரு பிரிட்டிஷ் தகவலாளியின் திடீர் மரணம், இங்கிலாந்து ஒழுங்குமுறை ஆணையங்களால் அவர் நடத்தப்பட்ட விதம் குறித்து ஒரு சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளைத் தூண்டியுள்ளது.

பிஜிசி பார்ட்னர்ஸ் என்ற தரகு நிறுவனத்தின் 57 வயதான முன்னாள் நிர்வாக இயக்குநரான சைமன் ஆண்ட்ரீஸ், நிதி முறைகேடு மற்றும் தகவலாளிகளுக்கு எதிரான பழிவாங்கல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக தனது முன்னாள் முதலாளி மற்றும் பிரிட்டனின் நிதி நடத்தை ஆணையத்துடன் (FCA) பல ஆண்டுகளாகப் போராடி வந்தார். செப்டம்பர் 23 அன்று தாய்லாந்தில் அவர் தற்கொலை செய்துகொண்டதாக சந்தேகிக்கப்படும் நிலையில் இறந்த பிறகு, இதில் எந்தவிதமான முறைகேட்டிற்கும் இடமில்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஆண்ட்ரீஸ், 2016 ஆம் ஆண்டிலேயே பிஜிசி நிறுவனத்தில் நடந்ததாகக் கூறப்படும் கணக்கியல் முறைகேடுகள் குறித்து கவலைகளை எழுப்பத் தொடங்கியிருந்தார். பின்னர், தனது அடையாளம்

தொடர்ச்சி: பக்கம் 16

## ஈரான் போரில் 81 போர் விமானங்களை அமெரிக்கா இழந்தது



பெப்ரவரி மாத இறுதியில் ஈரான் மீது வாஷிங்டனும் இஸ்ரேலும் போரைத் தொடங்கியதிலிருந்து குறைந்தது 81 அமெரிக்க விமானங்கள் இழக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்கச் சட்டமியற்றுபவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

செவ்வாய்க்கிழமையன்று(6) 'காங்கிரஷனல் ரிசர்ச் சர்வீஸ்' (CRS) வெளியிட்ட அறிக்கையின்படி, அழிக்கப்பட்ட அல்லது சேதமடைந்த அமெரிக்கப் போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் ட்ரோன்களின் மதிப்பு 3.3 பில்லியன் டொலர்களை எட்டக்கூடும். இந்த ஆவணத்தில் உள்ள புள்ளிவிவரங்கள் செய்தி அறிக்கைகள் மற்றும் அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு (US Central Command) மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை என்று CRS கூறியது. மோதலில் ஏற்பட்ட விமான இழப்புகளின் முழுமையான பட்டியலை வழங்குவதில் பென்டகன் தயக்கம் காட்டியதற்காக காங்கிரஸ் முன்பு அதைக் விமர்சித்திருந்தது.

அமெரிக்காவின் அதிநவீன போர் விமானங்களில் சிலவும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இதில் மார்ச் 19 அன்று ஈரானியத் தாக்குதலால் சேதமடைந்த ஒரு F-35A Lightning II ஸ்டெல்த் (ரேடாரில் சிக்காத) போர் விமானம் மற்றும் 12 F-15E Strike Eagle போர் விமானங்கள் ஆகியவை அடங்கும் என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

ஏழு KC-135 Stratotanker வான்வழி எரிபொருள் நிரப்பும் விமானங்களும் அழிக்கப்பட்டன அல்லது சேதமடைந்தன என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது. குறிப்பிடத்தக்க பிற விமான இழப்புகளில் இரண்டு A-10 Thunderbolt II விமானங்கள், இரண்டு MC-130J சிறப்புச் செயல்பாட்டு விமானங்கள் மற்றும் ஒரு E-3 Sentry வான்வழி எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு விமானம் ஆகியவை அடங்கும்.

அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஹெலிகாப்டர்களில், ஹார்முஸ் நீரிணைக்கு

தொடர்ச்சி: பக்கம் 16

## மூன்று மாதங்களில் நடந்த மோதல்களில் 15 இந்திய மாலுமிகள் உயிரிழப்பு



கடந்த இரண்டு நாட்களில் ஹார்முஸ் நீரிணை மற்றும் கருங்கடல் பகுதிகளில் வணிகக் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 12 இந்திய மாலுமிகள் காயமடைந்தனர்; இதில் செவ்வாய்க்கிழமை(6) ஓமன் அருகே தாக்கப்பட்ட எண்ணெய் டேங்கர் கப்பலில் இருந்த 11 பேரும் அடங்குவர்.

பனாமா கொடியுடன் இயங்கும் 'எம்டி ஆன் பீஸ்' (MT On Peace) என்ற கப்பல் ஹார்முஸ் நீரிணை வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத ஒரு ஏவுகணை அல்லது பொருள் தாக்கியதில் சேதமடைந்தது. இக்கப்பலில் இருந்த 19 பேர் கொண்ட குழுவில் 12 பேர் காயமடைந்தனர்; அவர்களில் 11 பேர் இந்தியர்கள் (மொத்தம் 17 இந்தியர்கள் கப்பலில் இருந்தனர்). காயமடைந்த மாலுமிகள் ஓமன் அதிகாரிகளின் உதவியுடன் மீட்கப்பட்டு, கசாப் (Khasab) பகுதியில் சிகிச்சை பெற்று வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம்

தொடர்ச்சி: பக்கம் 16

## இரகசியங்களை அம்பலப்படுத்திய விக்கிலீக்ஸ் தனது 20ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது




இணைய யுகத்தின் மிக முக்கியமான கசிவுகளை வெளியிட்டு, வகைப்படுத்தப்பட்ட அமெரிக்கப் போர் பதிவுகள், சிஐஏ ஹேக்கிங் கருவிகள், பெருங்கண்காணிப்பு மற்றும் பிற இரகசியமாகக் காக்கப்பட்ட அரசாங்க ரகசியங்களை அம்பலப்படுத்திய விக்கிலீக்ஸ் என்ற இரகசியங்களை அம்பலப்படுத்தும் தளத்தை அவுஸ்திரேலிய பத்திரிகையாளரும் ஆர்வலருமான ஜூலியன் அசாஞ்ச் நிறுவி 20 ஆண்டுகள் ஆகின்றன.

2006-ல் பதிவு செய்யப்பட்ட இந்த இணையதளம், இரகசியங்களை அம்பலப்படுத்துபவர்கள் தங்கள் தகவல்களை வெளியீட்டிற்காகச் சமர்ப்பிக்க ஒரு பாதுகாப்பான மற்றும் அநாமதேய வழியை வழங்கியது. அதன் ஆரம்பகால வெளியீடுகளில், குவாண்டநாமோ விரிகுடாவில் உள்ள அமெரிக்கத் தடுப்பு முகாமின் செயல்பாட்டு நடைமுறைகள், வங்கி மற்றும் பெருநிறுவன இரகசியங்கள், மற்றும் சர்ச் ஆஃப் சயின்டாலஜியின் உள் ஆவணங்கள் ஆகியவை அடங்கும்

தொடர்ச்சி: பக்கம் 16

## ஆய்வாளர் ஜோதிலிங்கம் அவர்களின் மறைவு ஈழத் தமிழினத்துக்குப் பேரிழப்பு!

-பா.அரியநேத்திரன்



ஈழத்தின் மூத்த அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், தமிழ்த்தேசிய பற்றாளரும், எழுத்தாளரும், விமர்சகரும் கல்வியலாளருமான சி.அ. ஜோதிலிங்கம் அவர்கள் (08/10/2026) காலமானார் அடைந்தார்.

1956 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் ஆரம்பத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் சட்டத்தரணியாகத் தனது பணியைத் தொடர்ந்தார். தமிழ் தேசியம், தமிழ் இறையாண்மை மற்றும் சுயநிர்ணய உரிமை குறித்து மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபட்டவர். யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு இயங்கும் 'சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின்' தலைவராகச் செயல்பட்டார்.



எழுத்தாளராகவும், பகுப்பாய்வாளராகவும் அறியப்பட்டவர். இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகள், இனப்பிரச்சினை மற்றும் சர்வதேச அரசியல் சூழல்கள் குறித்துப் பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்தவர்.

ஈழவிடுதலைப்போராட்டத்தை மையமாகக் கொண்டு பல்வேறு அரசியல் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களை முன்னெடுத்தவர். அரசியல் சிந்தனைகளை பாமர மக்களும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் பல நூல்களையும், நூல் வரிசைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள் சில முக்கிய நூல்கள்:

ஈழத் தமிழர் அரசியல் வரலாறு (1833 தொடக்கம் 1968 வரை) .இலங்கையில் இனக்குழும அரசியல் .ஒப்பியல் அரசாங்கம் .அரசியல் சிந்தனை நூல் வரிசை (பத்துக்கும் மேற்பட்ட சிறு நூல் தொகுப்புகள்). இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள், வட கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும், மலையக அரசியல்

தொடர்ச்சி: பக்கம் 15

## பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்திற்கு எதிராகத் தமிழர் தாயகத்தில் போராட்டம்

பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டமூலத்தை தேசிய மக்கள் சக்தி அரசு நிறைவேற்ற வேண்டாம் என்று வலியுறுத்தி தமிழர் தாயகத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் நேற்றுதினம் (09) போராட்டங்கள் இடம்பெற்றன.




இதன்படி, பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, காந்தி பூங்காவில் இன்று (09) காலை 10 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இதன்போது "அரசு மக்களுக்காக மக்கள் அரசுக்காக அல்ல", "இனியும் வேண்டாம் அரச பயங்கரவாதம்", "நாங்கள் கேட்பது மாற்றம் ஆனால் கிடைத்தது ஏமாற்றம்", "வேண்டாம் வேண்டாம் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டமூலம்" போன்ற வாசகங்கள் கொண்ட சுலோகங்களை ஏந்தியவாறு கோஷம் எழுப்பி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பு போராட்டத்தில் மனித உரிமை செயற்

தொடர்ச்சி: பக்கம் 16

## ஆசிரியர் தலையங்கம் | 10 ஒக்ரோபர், 2026

## மக்கள் இறைமையை தமது அறிவாலும் பொருள்வளத்தாலும் மக்கள் தாங்களே பாதுகாக்க வேண்டிய நிலை

உலகின் 2026ஆம் ஆண்டு அரசியல் மாற்றங்கள் எந்த ஒரு மக்களது மக்கள் இறைமையையும் மக்களே தமது அறிவாலும் பொருளாதாரப் பலத்தாலும் தாங்களே பாதுகாக்க வேண்டிய நிலையை உருவாகியுள்ளது.

பிரித்தானிய மக்களுக்குக் கூட இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளமையையே பிரதமர் அன்டி பேர்ணம் அவர்கள் யேர்மனிக்கு அவர் மீளவும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய வேண்டுமென்னும் கருத்தை லேபர்கட்சியின் லிவர்பூல் மாநாட்டில் கூறியவுடனேயே சென்றமை எடுத்துக்காட்டுகிறது. ஐரோப்பியக் கண்டத்தின் ஒரு நாடாகிய பிரித்தானியா ரஸ்யா ஐரோப்பிய நாடுகளின் மேல் தொடங்கியுள்ள கலப்புநிலை போருக்கு ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்தே அதனை எதிர்கொள்ள வேண்டியதாகவுள்ளது. கூடவே ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சீனாவுக்கும் இடையிலான நாளொன்றுக்கான வர்த்தகத் துண்டுவிழும் தொகை சீனா சார்பாக ஒரு மில்லியன் டொலர்களாக அமைந்து சீனாவின் பொருளாதாரக் காலனித்துவ நாடுகளாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை மாற்றிக் கொண்டிருக்கின்றன. சீனாவில் இருந்து ஐரோப்பிய தொழில்துறை இறக்குமதி செய்கின்ற உதிரிப்பாகங்கள் (Components) மற்றும் அறிவியல் தொழில்நுட்ப செயற்கை நுண்ணறிவு துறைகளுக்கான குறைக்கடத்திகள் (Semi Conductors) வழியாகவே இந்த வர்த்தகத் துண்டுவிழும் தொகை அமைவதால் இது குறித்து ஒரு பொருளாதார சமநிலையை ஏற்படுத்துவதற்குப் பேசுவதற்கு ஐரோப்பிய ஒன்றியக் குழு சீனாவுக்கே சென்றுள்ளது. அதேவேளை யேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றிய உற்பத்தி (Made in Europe) ஐரோப்பாவின் உற்பத்திகளுக்குப் போட்டு இந்தப் பதிவு இல்லாத பொருள்களுக்கு இறக்குமதி வரி உயர்வைச் செய்வதற்கான சட்டத்தையே ஐரோப்பிய ஒன்றியத்துள் கொண்டு வந்துவிட்ட நிலையில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்துள் இல்லாததினால் பிரித்தானியாவின் பொருளாதாரம் பலமாகப் பாதிப்படையும் சூழ்நிலை இயல்பாகிறது. இதனால் பிரித்தானியா மீளவும் ஐரோப்பிய ஒன்றியத்துள் இணைவதற்கு இடையில் கனடா கூட்டுறுப்பு நாடாக வந்தது போலவோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லாத சுவிட்சர்லாந்து, நோர்வே போன்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் கொண்டுள்ளன போன்ற முறைமைகள் வழியாகவோ இந்தப் பிரச்சினைக்கு பிரித்தானியா தீர்வு காண வேண்டிய நிலை உள்ளமையே பிரித்தானியப் பிரதமர் அவசர அவசரமாக யேர்மனி சென்றதற்கான சில காரணிகளாகவுள்ளன.

அதே வேளை நான்கைந்து மாதங்களில் மத்திய கிழக்கு போர்கள் மற்றும் ரஸ்யா உக்ரேன் போர்கள் என்பவற்றால் ஏற்படும் எண்ணெய் வழங்கல் பிரச்சினைகளால் பட்டினி நிலை உலகில் தோன்றலாம் என சரியான நேரத்தில் சரியான எச்சரிக்கையை உலகிற்கு விடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் முனைவர் ஜெயசங்கர் சுப்பிரமணியம் அவர்கள் உக்ரேனுக்கு நேரடியாகவே சென்றமை உலக அமைதிக்கான முயற்சியாகவே ஆய்வாளர்களால் பார்க்கப்படுகிறது.

இவைகள் ஒருபுறமிருக்க அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் 01. நான் நடுநிலை வகித்து, "இந்தியா-பாகிஸ்தான், 02. இஸ்ரேல் - ஈரான், 03. கம்போடியா – தாய்லாந்து, 04. செர்பியா – கொசோவோ, 05. ருவாண்டா – காங்கோ, 06. எகிப்து – எத்தியோப்பியா, 07. ஆர்மீனியா – அஜர்பைஜான் 08. இஸ்ரேல் - லெபனான் என எட்டு போர்களை நிறுத்தியுள்ளேன். இதனால் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற நானே தகுதியுள்ளவன். இது எந்த அமெரிக்க ஜனாதிபதியும் செய்யாத சாதனை " என அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் கடந்த 07ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாண்டுக்கான நோபல் பரிசுகள் சுவீடனில் நோபல் பரிசுத் தெரிவுக் குழுவினரால் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் பகிரங்கமாக அறிவித்துள்ளார். அவர் அமெரிக்காவில் நவம்பர் 3ஆம் நாளில் நடைபெறவுள்ள அமெரிக்க காங்கிரசுக்கும் அமெரிக்க செனட்டுக்குமான பகுதித் தேர்தல்களில் தனது குடியரசுக் கட்சியினர் வெற்றி பெறுவதற்கு இவற்றைத் தனது சாதனையாக வெளிப்படுத்தி மக்களின் வாக்கை கவரும் முயற்சியாகவும் நோபல் பரிசுத் தெரிவுக் குழுவினருக்கு மறைமுக அழுத்தம் கொடுக்கவும் இவ்வாறு பேசியுள்ளார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆனால் இந்த பேச்சு அமெரிக்கா தனது வல்லாண்மையைப் பயன்படுத்தி அனைத்துலக நாடுகளிலும் மக்களின் இறைமையை மேலாண்மை செய்கின்றது அல்லது செய்ய முயல்கின்றது என்பதும் பகிரங்கமாக உறுதியாகியுள்ளது.

வான்வெளிக் கட்டுப்பாடு அணுவாயுதப் பலம் ட்ரம்பின் மொழியில் "சூப்பர் இன்டலிஜென்ட்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு என்னும் மூன்று பலங்களையும் பயன்படுத்தி அமெரிக்கா உலகில் எந்த மக்களது இறைமையையும் கட்டுப்படுத்தும் உலக சக்தியாக ட்ரம்பின் அமெரிக்கா தன்னை முன்னிலைப்படுத்த முயன்று வருகின்றார். அவருடன் சில ஆண்டுகளாக முரண்பாட்டுடன் இருந்த எலான் மஸ்க்குக்கு தேசிய அறிவியல் பதக்கத்தை ட்ரம்ப் வழங்கி அவரை "நவீன கால தோமஸ் எடிசன்" எனப் புகழ்ந்துள்ளமையும் எலான் மஸ்க்கும் ட்ரம்பின் செயற்கை நுண்ணறிவு என்பதனை "சூப்பர் இன்டலிஜென்ட்" எனப்பெயர் மாற்றியதை ஏற்று தனது "ஸ்பேஸ் எக்ஸ் ஏஐ " என்ற நிறுவனப் பெயரை "ஸ்பேஸ் எக்ஸ் எஸ்ஐ" என மாற்றியதும் மீளவும் பில்லியனர்களின் கூட்டாண்மையில் அமெரிக்க தீர்மானமெடுக்கும் தன்மை தொடரப்போகிறது என்பதனை உறுதி செய்துள்ளது. மிகுந்த பண பலமும் வான்வெளிக் கட்டுப்பாட்டுப் பலமும் அமெரிக்க அரசத்தலைவரை சமகால சர்வ வல்லமை படைத்தவராக மாற வைத்துள்ளது. இதனை அவர் வெனிசுலாவில் மேற்கொண்ட அப்பட்டமான ஆக்கிரமிப்பும் கியூபாவைப் பலவழிகளிலும் முடக்குவதும் கிரீன்லாந்தில் தன்னை விடுத்துப் பாதுகாப்பில் கிரின்லாந்தும் அதனை உள்ளடக்கிய டென்மார்க்கும் எதனையும் செய்ய இயலாத நிலையை, 1987ஆம் ஆண்டின் இந்திய – சிறிலங்கா உடன்படிக்கை போன்ற அமெரிக்க- டென்மார்க் - கிரீன்லாந்து ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தியுள்ளதும், யப்பானின் யென்னை டொலருடன் இணைத்து யப்பானின் நாணயத்தைப் பேணுதல் என்ற பொறிமுறையூடாக ஆசியப் பங்குச் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையும், ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை முற்றாக விலக்கி மத்திய கிழக்கில் நவம்பர் 3க்கு முன்னரோ பின்னரோ தான் நினைத்தவாறு எடுக்க இருக்கும் வான்வெளி, கடல்வழி நடவடிக்கைகளில் தனது படையினருக்கு இழப்புக்கள் வராதவாறு மிக நுட்பமான ராஜதந்திர நகர்வை மேற்கொண்டுள்ளமையும், பிரித்தானியாவில் நிலைப்படுத்தியிருந்த அமெரிக்க நவீன குண்டுவீச்சு விமானங்களை மீளவும் அமெரிக்காவுக்கே அழைத்துள்ளமையும், அமெரிக்காவின் நவீன வசதிகள் கொண்ட ஆபிரகாம் லிங்கன் கப்பலை மத்திய கிழக்கில் இருந்து மீளப்பெற்று அதற்குப் பதிலாக இன்னும் பலம் வாய்ந்த கடற்படைக் கப்பலை முன்னரை விட அதிக மனிதவலுவுடன் மத்திய கிழக்கிற்கு அனுப்பியுள்ளதும் உலகில் தனது அமெரிக்கா தாக்குதல் திறனை எல்லாவழிகளிலும் மேலும் வலுப்படுத்தி வருவதை உறுதி செய்கிறது.

இக்காலகட்டத்தில் எல்லாத் தீவுகளும் மூலோபாய தந்திர அரசியலுக்கும் போரியலுக்கும் முக்கியத்துவமானவை என்கிற ட்ரம்பின் ஐக்கிய நாடுகள் சபை பகிரங்க அறிவிப்பின் வட்டத்துள் இலங்கையும் இந்து மாக்கடல் தீவு என்ற வகையில் அடங்கலாம் என்பதை ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் இலங்கைத் தீவில் அத்தீவு சிங்கள மக்களின் இறைமைக்கு மட்டுமே உரியதென கடந்த 78 ஆண்டுகளாக பிரித்தானிய காலனித்துவ அரசால் ஈழத்தமிழரின் ஈழத்தமிழர்களின் உள்ளகத் தன்னாட்சி உரிமையின் சுதந்திரமான செயற்பாடற்ற நிலையில் உருவாக்கப்பட்ட சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறை செயல்பட்டுக் கொண்டிருப்பதால் ஈழத்தமிழர்களால் உலகின் வேகமான அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப தங்களது மக்கள் இறைமையைப் பாதுகாக்கக் கூடிய வகையில் மற்றைய அரசுகளுடன் எந்த நேரடித் தொடர்பாடல்களையும் மேற்கொள்ள இயலாது என்பது வெளிப்படையான ஒன்று.

அதே வேளை ட்ரம்பின் அமெரிக்க அரசுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான அண்மைக்கால ஒப்பந்தங்களோ அல்லது இந்திய அரசுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான அண்மைக்கால ஒப்பந்தங்களோ இரகசியக் காப்புத்தன்மை கொண்டதாக இருப்பதால் ஈழத்தமிழர்களால் தங்கள் தாயகப் பகுதியின் பாதுகாப்புடன் கூடிய அமைதி, வளர்ச்சி எவ்வாறு இன்றைய அனைத்துலக மக்கள் இறைமையை வல்லாண்மை மூலம் கட்டுப்படுத்தும் முயற்சிகளிடையே அமையுமென எதிர்வு கூறவும் இயலாத நிலை தொடர்கிறது.

ஆயினும் கடந்த வாரத்தில் வடக்கின் கடல்வளத்தின் மூலம் பல பில்லியன் வருமானம் பெறுவதற்கான சிறிலங்காவின் பொருளாதாரத் திட்டத்தினை வேகப்படுத்தும் நோக்கில் காங்கேசன்துறையிலும் பரந்தனிலும் கடலட்டை கடற்பாசி ஏற்றுமதிக்கான பொருளாதார மையங்களை 2027 ஜனவரி முதல் செயற்படுத்த நிலங்களை இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. மன்னாரில், திருகோணமலையில் கனிம வள அகழ்வுகளை வேகப்படுத்தும் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன. இவற்றின் நேரடியான தேவைகளும் விபரிப்புகளும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பதாக இருந்தாலும் இவற்றில் எந்த நாடுகள் பின்னணி வகுத்து உலகப் பாதுகாப்பு உலகச் சந்தை சார்ந்த விடயங்களுள் இவற்றை தொடர்புபடுத்தவுள்ளன என்பது கேள்விக்குரிய விடயமாக உள்ளது.

இத்தகைய சூழலில் மக்களே தங்கள் மண் மீதான தங்களின் இறைமையை தங்களிடை உள்ள புத்திஜீவிகள் முதலீட்டாளர்கள் உழைப்பாளர் சக்தி என்பவற்றின் ஒருங்கிணைந்த திட்டமிடல் மூலம் அனைத்துலக மயப்படுத்தித் தங்கள் மண்ணை, தங்கள் இருப்பை, தங்கள் தன்னாட்சியை பாதுகாக்க வேண்டும். இதற்கு ஈழத்தமிழர்கள் குறிப்பாக அனைத்துலகிலும் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் உலகில் வேகமாக மாறிக்கொண்டிருக்கும் நாளாந்த அரசியல் பொருளாதார மாற்றங்களை அறிவுசார் அணுகுமுறையில் ஆராய்ந்து அதற்கேற்ப சமகாலத்தை எதிர்கொள்ள வல்ல எதிர்வினைகளை ஆற்றவல்ல அத்துறைகளில் மேற்படிப்புகளை மேற்கொண்ட மேற்கொள்கிற துறைசார் கல்வியும் அனுபவமும் உள்ளவர்களை இணைத்த ஒரு அரசியல் பொருளாதார சிந்தனை மையத்தினரை (Think Tank) தாங்கள் வாழும் நாடுகளில் அமைக்க வேண்டும் என்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது. அதனைத் தாயகத்தில் உள்ள அறிவுசார் சமூகத்துடன் இணைப்பதற்கு அங்கும் அத்தகைய கட்டமைப்பு உள்ள அரசியல் பொருளாதாரச் சிந்தனை மையத்தை அமைக்க வேண்டும். கடந்த வியாழன் காலமாகி எம்முடன் வாழும் அரசியல் பேராசிரியரும் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான ஜோதிலிங்கம் அவர்களின் நினைவாகக் கூடத் தொடங்கலாம் என்பது இலக்கின் கருத்து. இது அவருடைய மக்கள் பணிக்கான நிரந்தரமான நினைவேந்தலாக அமையும் என்பது இலக்கின் எண்ணம். தமிழகத்தில் தமிழக வெற்றிக் கழகம் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தல்களில் பெற்ற வெற்றி முதலமைச்சர் யோசப் விஜய் அவர்களால் நிலையான பலமான மாநில ஆட்சியை ஏற்படுத்த இயலும் என்பதனை நிரூபித்துள்ள நிலையில் தமிழக, ஈழத் தமிழர்களிடையிலான பொருளாதார முயற்சிகளை வளர்த்தெடுப்பதற்கான காலம் உருவாகியுள்ளது. இந்நிலையில் இந்த அரசியல் பொருளாதார சிந்தனை மையத்தின் தேவை மிக முக்கியமானதாகின்றது என்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது. அதே வேளை தமிழ் வம்சாவளிப் பெண்ணான முன்னாள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத் தலைவி நவநீதம்பிள்ளை அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டமையை வரவேற்று வாழ்த்து தெரிவிக்கும் இலக்கு அவர் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு பொறுப்பாக இருந்த காலத்து ஈழத் தமிழர்களுக்கு சிறிலங்கா நடத்திய இனஅழிப்பு குறித்த அவரின் பார்வையை இனியாவது அவர் ஒரு நூலாக வெளியிட வேண்டுமென்ற கோரிக்கையை அனைத்துலக ஈழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் அவரிடம் எழுப்ப வேண்டும் என்பதனையும் இலக்கு குறிப்பிட விரும்புகிறது.

**ஆசிரியர்**




"உலகம் தாய்மையின் காலடியில் உருள்வதால்
நான் பெண்மையைப் போற்றுகிறேன்"
என்னும் உண்மை வரிகளில்
பெண்மையின் மேன்மையைப் பேரழகாய் எடுத்துச்சொன்ன
பெருந்தலைவன் செய்தவிந்தை ஈழமண்ணிலே
பெண்ணின் மகதத்துவத்தைப் பறைசாற்றிற்று.

ஆக்கும் சக்தியின் வல்லமை - தீமையை
அழிக்கும் சக்தியின் வடிவம்
அன்னை என்கின்ற அதியுயர் பக்குவம்
தங்கை தமக்கை தாரம் தோழி ஆகிய
அன்பு உறவுகளின் பெட்டகம் - மனிதகுல
அசைவியக்கத்தின் அச்சாணி பெண்மை

மங்கை எனும் மொழியில் தங்கும் பொருள் பலவே
மானம் சுமந்தவளே தன்மானம் நிறைந்தவளே
வாழ்விற்குப் பங்கவருமின்
தீயாய் எழுந்திடலும் திடமான நிதர்சனமே.

பெண்விடுதலை மண்விடுதலை இரண்டும் சாத்தியமானால் - தமிழ்
ஈழவிடுதலை முழுமை பெறும் என்பது
சூரியத்தேவனின் தீர்க்கதரிசனம்

தனக்குள்ளே முடங்கி தினம்தினம் புளுங்கி
உறவுக்குள் அடங்கி ஊருக்குள் ஒடுங்கி
அறிவதைச்சுருக்கி அறியாமைக்குள் நசுங்கி
மாயைக்குள் அழுந்தி மாண்பினை மறந்துவாழ்ந்த
மகளிர் தம் மடமை விலகி மனந்திறந்த நாளாய்
மாலதி அவர்கள் மாவீரம் உரைத்துச் சென்ற
தமிழீழப்பெண்கள் எழுச்சிநாள்
நிமிர்ந்து நிற்கிறது கம்பீரமுடன்.

ஒக்டோபர் பத்தாம்நாள்
புரட்சிப் பெண்களின் புறப்பாட்டை எடுத்தியம்பும்
புதுமையானநாள்.
பெண்விடுதலை என்பது பன்னெடுங்காலமாய்
பெண்கள்மேல் எழுதப்பட்ட
அடக்குமுறைக்கு எதிரான விழிப்பு.

வீட்டுக் கடமைகளில் மட்டுமின்றி
நாட்டுநலனிலும், நற்சமூகத்தின் தோன்றலிலும்
பங்கெடுத்து ஒரு பாகமாய்த் திகழும் பெண்களின்
உரிமைகளை வென்றெடுக்க முயல்வது.

பெண்விடுதலை என்பது
ஆணுக்குப்பெண் சரிசமானமாய்ப் பணிசெய்யும்
விரிவான சிந்தனைக்கு வித்திடும்
வேகத்தை செயலாற்ற விளைவது.

நிமிர்ந்தநடையும் நேர்கொண்ட பார்வையும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்ட
புதுமைப்பெண்ணைத்தேடி
புதுக்கவிதை செய்தார் பாரதி.

துணிந்த செயலும் தூயமனத்திடமும்
தெளிந்த மெய்ஞானச்செருக்கும் கொண்ட
புரட்சிப்பெண்களைப் புடமிட்டு
எழுச்சிக் கவிதை செய்தார் எங்கள் அண்ணன்.

அச்சமில்லை அச்சமில்லை எனும் முழக்கம் - வான்
உச்சிவரை எழுந்தது ஈழத்தில்
சூரியத்தலைவன் சுடர்கொடுத்தான்
வீரியத்தீயைப் பற்ற வைத்தான்
சூரியப்புதல்விகள் எழுந்தனர், விரைந்தனர்
போரியல் உத்திகள் கைவசப்பட்டன.

ஆணுக்கு நிகராய் நின்று அனைத்துத் துறைகளிலும்
வினைத்திறன் ஆற்றிடும் பெருமை
விடுதலைப்பெண் புலிகளுக்கு மட்டுமல்ல
விடியலைத்தேடும் பெண்களுக்கும்
உரித்தாயிற்று தமிழீழத்தில் .

நெருப்பாய் நிற்றலும் வேண்டும் - பெண்கள்
பொறுப்பாய் நிமிர்தலும் வேண்டும்
நீராய்ப்பொழிதலும் வேண்டும் -  சமயத்தில்
வேராய் அறிதலும் வேண்டும் - புதிய
வேதம் பிறந்தது எம்மண்ணில்
வீரப்பெண்களின் தோற்றம் நிகழ்ந்தது
விடுதலைப்போருக்கு வேகம் சேர்த்தது.
வியத்தகு செயல்களால் வெற்றி குவித்தது.

அங்குசம் கொண்டு ஆனை அடக்கினாள்
அரியாத்தை எனும் தமிழ்மறத்தி அன்று
ஆயுதம் கொண்டு பகைவரை அழித்திடும்
புலியாத்தைகள் காலமன்றோ இன்று.

மாலதி, சோதியா என்னும் தமிழ் மறத்திகள் வழியிலே
ஆயிரமாயிரம் நங்கையர் நடந்தனர்
பயிற்சிக்களங்களிலே பம்பரமாய்ச் சுழன்று
பலமிக்க பெண்களாய்ப் பரிணமித்தனர்
படையணிகள் பலவாய்க்கொண்டு
படைத்தளங்களை வீழ்த்தி வென்றனர்.

முடியாது என்ற சொல்லுக்கு முற்றுவைத்து
கடுமையான பணிகள் பலதைத்
திறமையாக முடித்துக்காட்டி
காலத்தின் நாயகரியாய் வலம் வந்தனர்

புவியியல் வரலாற்றில் இதுவரை
அறியப்படாத அதிசயமாய்
செயற்கரிய செயல்களைச் செவ்வனே ஆற்றிடும் வீரம்
தமிழீழப் பெண்களின் தனிப்பெரும் முத்திரைகள்

உயிர்க்கருவிகொண்டு - பகை
எரித்தழிக்கும் கரும்புலியாகி
வெடித்துச்சிதறிய சிதறிய வீராங்கனைகளை
வேறெங்கும் கண்டறியோம்.

தனித்தே செயலாற்றி தம்முயிரை காற்றிலூதி
தரையிலும் கடலிலும் காவியம் படைத்திட்ட
தற்கொடைத் தமிழச்சிகள்.

கணவருடன் மனைவியுமாய்
களத்திடம் தமையீந்த காவியத்தலைவிகள்
பெற்ற சிசுவைப் பிரிந்து செருக்களம் சென்றதாய்கள்
பெயர் ஊர் முகம் மறைத்து
பெரும் போரிலக்கைத் தகர்த்த மாதர்
தன்னலம் பாராது தாய்நாட்டைக் காத்துநின்றனர்
சுடரும் வீரவரலாற்றினை
சொல்ல மொழி போதவில்லை

வஞ்சகர் கையில் வதைபடும் தாய்நிலமே
வாய்திறக்க முடியாத வலிசுமக்கும் எம்குலமே
வேள்வித்தீ இன்னும் ஓயவில்லை - எம்
தோழியர் விட்டுச் சென்ற பணிகள்
தோழிலே கனக்கிறது
மனதின் காயங்கள் இன்னும் ஆறவில்லை
கடமைகள் கண்முன்னே விரிகிறது.

தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளிலே
முழு உலகம் கேட்கும் வண்ணம்
முழக்கமிட்டு சபதம் கொள்வோம்
தமிழீழம் அடையும்வரை ஓயமாட்டோம்.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

கலைமகள்




விதுரன்

இலங்கை அரசியல் வரலாற்றில் தடுத்து நிறுத்த முடியாத பேராதிக்கச் சக்தியாகவும், வீழ்த்த முடியாத குடும்ப ஆட்சியாகவும் விளங்கிய ராஜபக்ஷ குடும்பத்தின் பிடி தளர்ந்து, அவர்கள் ஒவ்வொருவராக நீதிமன்றப்படிகளையும் சிறைக்கதவுகளையும் மிதிக்கும் சூழல் தற்போது உருவாகியுள்ளது.

முன்னாள் முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையானது, இலங்கையின் அதிகார அரசியலில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய திருப்பமாகும்.



முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப்பட்ட போது, அது அன்றைய ஆட்சியாளர்களின் அரசியல் பழிவாங்கலென விமர்சிக்கப்பட்டதைப் போல, ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் சிறைவாசத்தை ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன அரசியல் பழிவாங்கலாகச் சித்தரிக்க தீவிரமாக முயற்சிக்கிறது.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்துள்ளது. ராஜபக்ஷக்கள் மீது தமக்குத் தனிப்பட்ட கோபதாபங்களோ பகையோ இல்லை என்றும், நாட்டின் பொதுச்சொத்தைச் சூறையாடியவர்கள் எவராயினும் அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்பதே தமது கொள்கை என்றும் உறுதியாகக் கூறுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைத்த இரண்டு ஆண்டுகளில், ஊழல் மற்றும் நிதி முறைகேடுகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் முன்னெப்பொழுதும் இல்லாத வீச்சை எட்டியுள்ளன. பிரதியமைச்சர் சுனில் வட்டகல மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 16 முன்னாள் அமைச்சர்கள், ஒரு முன்னாள் முதலமைச்சர், 4 முன்னாள் அமைச்சர்களின் மனைவிகள் மற்றும் 7 பிள்ளைகள் ஊழல் குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, விமல் வீரவன்ச, மஹிந்தானந்த அளுத்கமகே, பஷில் ராஜபக்ஷ, ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்க, பிரசன்ன ரணதுங்க, ஏ.எச்.எம். பௌசி, கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பல முக்கிய தலைவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கும் விசாரணைகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டது முதல், நாட்டின் உயர்மட்ட அதிகாரிகளாக இருந்த பலர் வரை கைது படலத்தில் சிக்கியுள்ளது, முந்தைய ஆட்சிகளில் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் எந்தளவிற்கு மலிந்து காணப்பட்டிருந்தன என்பதைத் தெளிவாக்குகிறது.

இந்த விசாரணை வளையத்திற்குள் ராஜபக்ஷ குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் தீவிரமாகக் கொண்டுவரப்பட்டுள்ளனர். ‘சிரிலிய’ மற்றும் அரச வங்கியிலிருந்து நிதி பெறப்பட்டுத் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குற்றச்சாட்டில் ஷிரந்தி ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கிரிஷ் குழுமம், பிரான் எயார் பஸ் கொள்வனவின்போது இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கறுப்புப் பணச் சுத்திகரிப்பு தொடர்பில் நாமல் ராஜபக்ஷ ஏற்கனவே சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவன நிதி முறைகேடுகள் மற்றும் விண்வெளித் திட்டப் போர்வையில் இடம்பெற்ற அரச நிதி துஷ்பிரயோகம், கடற்படையில் இணைந்து பிரித்தானிய ரோயல் கடற்படைக்குப் பயிற்சிக்குச் சென்றமை குறித்த விசாரணைகளில் யோஷித்த ராஜபக்ஷ மற்றும் ரோஹித்த ராஜபக்ஷ ஆகியோர் சிக்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் அடிக்கடி விசாரணைக்கு அழைக்கப்பட்டு வருகின்றனர்.

திவிநெகும நிதி முறைகேடு வழக்குகளில் பஷில் ராஜபக்ஷவை அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்து சட்டத்தின் முன் நிறுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. சமல், ஷசீந்திர, நிருபமா மற்றும் ஜாலிய விக்ரமசூரிய, உதயங்க வீரதுங்க போன்ற உறவினர்களும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி நீதிமன்ற அலைச்சல்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக நாட்டின் உயர்மட்ட அரசியல் குடும்பங் கள் தண்டிக்கப்படுவது இலங்கைக்குப் புதியதாக இருக்க லாம். ஆனால் உலக வரலாற்றில் இதற்கு எண்ணற்ற முன்னுதாரணங்கள் உள்ளன.

பிலிப்பைன்ஸ் நாட்டில் பெர்டினாண்ட் மார்க்கோஸ் மற்றும் அவரது மனைவி இமெல்டா மார்க்கோஸ் ஆகியோர் பில்லியன் கணக்கான அரச நிதியைச் சூறையாடியதற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணைகளுக்கும் சொத்துப் பறிமுதல்களுக்கும் உள்ளாகினர்.



மலேசியாவில் ‘1மலேசியா டெவலப்மென்ட் பெர்ஹாட்’ நிதி மோசடி வழக்கில் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக்கிற்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, தற்போதும் அவர் சிறைவாசம் அனுபவித்து வருகிறார். அவரது மனைவி ரோஸ்மா மன்சூரும் ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டார்.

தென் கொரியாவின் முன்னாள் பெண் ஜனாதிபதி பார்க் கென்-ஹே, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் இலஞ்சக் குற்றச்சாட்டுகளுக்காக 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி லூலா டா சில்வா மற்றும் பெரு நாட்டின் பல முன்னாள் அதிபர்கள் ஊழல் வழக்குகளில் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

உலகளவில் இரும்புப்பிடி கொண்டுள்ள சீனாவில் கூட, கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி மரண தண்டனை வரை விதிக்கப்படும் நிலை தொடர்கிறது.

ராஜபக்ஷவினரதும் முந்தைய ஆட்சியாளர்களினதும் ஊழல்களைத் தண்டிக்க முனைவதாகக் கூறும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது அல்ல.

உலக வரலாற்றில் முற்றாக ஊழலற்ற அரசாங்கம் இருந்ததாகச் சரித்திரம் இல்லை. தற்போதைய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்த இரண்டு ஆண்டுகளில், எரிபொருள் கொள்வனவு, கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரம் மற்றும் நிலக்கரி இறக்குமதி முறைகேடுகள் எனப் பல புதிய குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்த நடுநிலையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை கண்டறியப்படாத வரை, ‘நாங்கள் யோக்கியமானவர்கள்’ என்ற அரசாங்கத்தின் வாதம் முழுமை பெறாது.

மற்றொரு அரசாங்கம் வந்துதான் இவற்றை விசாரிக்க வேண்டும் என்ற நிலை உருவானால், தற்போதைய ஆட்சியாளர்களின் வெளிப்படைத்தன்மையும் கேள்விக்குறியாகவே அமையும்.



ஒரு முக்கியமான அரசியல் யதார்த்தத்தையும் நாம் கடந்து செல்ல முடியாது. ராஜபக்ஷவினர் புரிந்த பொருளாதாரக் குற்றங்களுக்கும் நிதி மோசடிகளுக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கும் தற்போதைய அரசாங்கம், தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்த போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் முழுமையான மௌனம் காக்கிறது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பதிலளிக்கும் கடப்பாட்டிலிருந்து ராஜபக்ஷவினரைப் பாதுகாப்பதில் தற்போதைய ஆட்சியாளர்களும் உறுதியாகவே நிற்கின்றனர்.

கடந்த காலங்களில் அதிகாரப்போதையில் மூழ்கி, நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து, சட்டத்தையும் ஜனநாயகத்தையும் ஏளனம் செய்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு, அவர்கள் புரிந்த தவறுகளின் விளைவே தற்போதைய சிறைவாசமும் நீதிமன்ற அலைச்சல்களும் ஆகும்.

இருப்பினும், அரச நிதியைத் துஷ்பிரயோகம் செய்தமைக்காகத் தண்டனை வழங்குவது எவ்வளவு முக்கியமோ, அதேயளவிற்குத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் நீதியை வழங்குவதே உண்மையான சட்டத்தின் ஆட்சியாக அமையும்.

• • •




எமது சமூகத்தில் வேரூன்றியிருந்த, பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். பெண்ணானவள் இப்படித்தான் இருப்பாள். இதற்கு மேல் அவளால் முடியாது. ஆணைவிட பெண்ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்துக் களைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் போராளி 02ஆம் லெப்டினன்ட் மாலதி 39 ஆண்டுகளுக்கு முன் பொய் யாக்கினாள்.



பெண்ணினால் எல்லாம் முடியும் என்று செய்து காட்டினாள். அந்நிய ஆக்கிரமிப்பில் எமது தேசம் துவண்டிருந்தபோது வீறுகொண்டெழுந்தாள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாவதைப் பார்த்துக் கொதித்தாள்.

நாட்டின் விடுதலையோடு பெண்ணினத்தின் விடு தலையையும் கருத்தில் கொண்டு ஆயுதம் தூக்கியவள், அந்த இலட்சியக் கனவோடே வீரச்சாவை 1987, அக்டோபர் 10 இல் தழுவிக்கொண்டாள். இன்று 39ஆவது அந்த வீரமகளின் 39ஆவது ஆண்டு நினைவு நாளாகும்.

ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட 1975 தொடக்கம் 1987 வரை 12 வருடங்கள், போரியல் தாக்குதல் முறை என்பது கரந்தடித் தாக்குதலாகவே (கெரில்லா தாக்குதல்) வடகிழக் கில் நடந்தன.

1987, ஜூலை 29, இலங்கை-இந்திய ஒப்பந்தம் வரலாற்றில் ஈழத்தமிழர்களுக்கு இனிப்புகளைவிட கசப்புக ளைத் தந்த சம்பவங்கள் பல உண்டு. 1987, செப்டம்பர் 26, தியாகி திலீபனின் 12 நாள் உண்ணாவிரத மரணம், 1987, அக்டோபர் 05, விடுதலைப்போராளிகளான குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 பேர்களின் இழப்பு என்பன விடு தலைப்புலிகள் கரந்தடித் தாக்குதலில் இருந்து விலகி மரபுவழிப் போராட்டத்துக்கு வித்திட்டது.



1987, அக்டோபர் 10 இல் முதலாம் கட்ட ஈழப்போர் எனப் பெயர் சூட்டி, இந்தியப் படையுடன் விடுதலைப்புலிகள் போரை ஆரம்பித்தனர். அதில் மூன்று சாதனைகளை விடுதலைப்புலிகளால் நிகழ்த்த முடிந்தது.

முதலாவது சாதனை, 12 ஆண்டுகளாகக் கரந்தடித் தாக்குதலை நடத்தியவர்கள் ஒரு மரபுப்போர்ப் படையாக மாறியது. இரண்டாவது சாதனை, இலங்கை இராணுவத்து க்கு எதிராகப் போராடிய மனோநிலை, அயல்நாட்டுப் படை யான இந்தியப் படையுடன் மோதத் துணிந்தது.

மூன்றாவது சாதனை, கடந்த 12 ஆண்டுகளாக ஆண் போராளிகளை மட்டும் பயன்படுத்திய போர்க்களம் முதல் முறையாகப் பெண் போராளிகளையும் களமுனையில் இறக்கியது.

இந்த மூன்று சாதனைகளுடன் போரை ஆரம்பித்த அன்று, முதல் நாள் 1987, அக்டோபர் 10 இல் யாழ்ப்பாணத்திற்கு அருகில் கோப்பாயில் இந்திய அமைதிப்படைக்கு எதிரான படை நடவடிக்கையின் தாக்குதலின்போது மகளிர் படைப்பிரிவினரை வழிநடத்திய மாலதி இரு கால்களிலும் துப்பாக்கிச் சூட்டுப்பட்டு, படுகாயமடைந்து, மிகுந்த இரத்தப் போக்கு ஏற்பட்டு, அசைய முடியாத நிலையில் சயனைட் அருந்தி வீரச்சாவைத் தழுவினார்.

**யார் அந்த மாலதி?**

1967, ஜனவரி 04ஆம் நாள் மன்னாரில் பேதுருப்பிள்ளை தம்பதிகளுக்கு உதித்த பெண்பிள்ளை. அவருடைய இயற் பெயர் சகாயசீலி. அவர் விடுதலைப்புலிகளில் பெண் போரா ளியாக இணைந்தபோது மாலதி என்ற பெயர் அவருக்குச் சூட்டப்பட்டது.

விடுதலைப்புலிகளின் முதலாவது பெண் போரா ளிகளின் பயிற்சி முகாம் 1985, ஆகஸ்ட் 18 இல் ஆரம்பிக் கப்பட்டபோது அதில் 18 வயதில் இணைந்து கொண்டார் மாலதி. தனது 20ஆவது வயதில், 1987, அக்டோபர் 10 இல் அன்னியப் படையான இந்தியப் படை மீது நடந்த முதலாவது தாக்குதலில் சாவைத் தழுவினார்.



அவருக்கு 02ஆம் லெப்டினன்ட் என்ற பட்டம் தலை மையால் வழங்கப்பட்டதுடன், ஈழத்துப் போரியல் வரலாற் றில் முதலாவது வீரச்சாவைத் தழுவிய பெண் போராளி என்ற வரலாற்றைப் பெற்றார்.

அவர் உயிர்நீத்த நாளை முதலாவது ஆண்டு நினைவு நாளில் தேசியத் தலைவர் மேதகு அவர்களால் 1988, அக்டோபர் 10ஆம் நாள் தொடக்கம் ஆண்டுதோறும் "தமிழீழ மகளிர் எழுச்சி நாள்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. அது பெண்கள் விழிப்புணர்வு நாளாக உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது.

மாலதியின் வீரச்சாவுக்குப் பின்னர் தமிழீழ பெண் கள் எழுச்சி நாள் 1988, அக்டோபர் 10 இல் தொடங்கி 2009, மே 18 வரை தொடர்ச்சியாகப் பெண்கள் தொடர்பாகப் பல்வேறுபட்ட முன்னேற்றகரமான விடயங்கள் இருந்தபோ தும், அதன்பின்னரான கடந்த 17 வருடங்களாக ஈழத்தில் பெண்கள் தொடர்பான பல பிரச்சினைகளையும், அச்சுறுத் தல்களையும் எதிர்கொண்டே வடகிழக்கில் பெண்களின் வாழ்க்கை தொடர்கிறது.

விடுதலைப்புலிகள் மாலதியைக் கௌரவிக்கும் நோக்கில் விடுதலைப்புலிகளின் படையணி ஒன்றுக்கு மாலதி படையணி எனப் பெயரிட்டனர். மேலும், கிளி நொச்சியில் இவருக்காக ஒரு நினைவுச்சின்னம் கட்டப்பட்டு 2004ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் நாள் திறக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகளில்

பா.அரியநேத்திரன்

பெண் போராளிகள் பெண்புலிகள் என அழைக்கப்பட்டனர். பெண்புலிகள் தமக்கெனத் தனியான படைப்பிரிவுகளைக் கொண்டிருந்தனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத் துக் கட்டமைப்புகளிலும் பெண் போராளிகள் தங்கள் பங்களிப்பைச் செலுத்தியிருந்தனர். இலங்கைப் படையி னருடன் பல்வேறு சண்டைகளையும் பெண் போராளிகள் தனியே தங்கள் படையணிகளைக் கொண்டு 2009, மே 18 வரை மேற்கொண்டிருந்தனர்.



ஈழத்தமிழ் பெண்கள் 2009, மே 18க்கு முன்னர் வடகிழக்கில் சுதந்திரமாகத் தன்னந்தனியாக நள்ளிரவு 12 மணிக்கும் நடமாடக்கூடிய சுதந்திரம் அந்தக் காலத்தில் இருந்தது.

போர் மௌனத்துக்குப் பின்னர் கடந்த 17 ஆண்டு களாகப் பெண்கள் பல்வேறு நெருக்கடிகள், அச்சுறுத்தல், பாதுகாப்பின்மை, பாலியல் தொல்லை எனப் பல வேதனைகளைச் சுமந்து வாழ்வது ஒருபுறம், மறுபுறம் முன்னாள் பெண் போராளிகளுடைய வாழ்வாதாரம், சுயதொ ழில், குடும்ப இணைவுகளால் படும் வாழ்க்கைச் சுமைகள், போரினால் கணவனை இழந்த பெண் போராளிகள் தங்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் சான்றிதழ்களைப் பெறுவதில் இன்றும் பல நிர்வாகச் சிக்கல்களைச் சந்தித்து வருகின்றனர்.

போரின் விளைவாக வடகிழக்கில் தங்களின் கண வன்மார்களை அல்லது குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவர்களை இழந்த பெண் தலைமைத்துவக் குடும் பங்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது. யுத்தம் முடிந்த காலப்பகுதியில் வடகிழக்கில் சுமார் 89,000க்கும் அதிகமான போர்விதவைகளும், குடும்பப் பாரத்தைச் சுமக் கும் பெண்களும் அடையாளம் காணப்பட்டனர்.

போரில் காயமடைந்து மாற்றுத்திறனாளிகளாக மாறிய பல பெண் போராளிகள், முறையான மருத்துவ மற்றும் பொருளாதார உதவிகள் இன்றி வாழ்ந்து வரு கின்றனர்.

முன்னாள் பெண் போராளிகள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்கள் சமூகத்தில் எளிதாக மறுவாழ்வு பெற முடியாமல், ஓரங்கட்டப்படும் நிலைமை களை எதிர்கொள்கின்றனர். நில ஆக்கிரமிப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் (வறட்சி, வெள்ளம்) காரணமாகப் பாரம்பரிய விவசாயம் மற்றும் உள்ளூர் தொழில்களில் ஈடு படுவதிலும் இவர்களுக்குத் தடைகள் நீடிக்கின்றன.

இவை அனைத்துக்கும் மேலாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பப் பெண்கள் யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் அதற்குப் பின்னரும் தங்களின் கணவன்மார், பிள்ளைகள் அல்லது உறவினர்களைப் பாதுகாப்புப்

தொடர்ச்சி: பக்கம் 15




தீபச்செல்வன்

மைத்ரேயி ராமகிருஷ்ணன் 'நான் ஒரு தமிழீழப் பெண்' என்று அடையாளப்படுத்திக் கொண்டது, இலங்கையின் தென்னிலங்கையில் இவ்வளவு பெரிய அச்சத்தை ஏற்படுத்தும் என்று அவரேகூட எதிர்பார்த்திருக்க முடியாது. கனடாவில் பிறந்து வளர்ந்த ஒரு இளம் நடிகை தனது கலாசார வேர்களைத் தேடிப் பேசுகிறார். தனது குடும்பம் இலங்கையிலிருந்து வந்தது என்றும், தனது கலாசாரம் தமிழ் என்றும், தன்னை தமிழீழப் பெண்ணாகப் பெருமையுடன் அடையாளப்படுத்துவதாகவும் அவர் கூறுகிறார். இதற்காக அவரை நோக்கி இனவாத வசைகளும் பாலியல் அவதூறுகளும் குவிக்கப்பட்டுள்ளன. அவரது புதிய திரைப்படத்துக்கு எதிராக திட்டமிட்ட இணைய மதிப்பீட்டு வீழ்த்தல் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.



### மைத்ரேயி மீது குவிந்த இனவாதம்

மைத்ரேயி தனது அடையாளம் குறித்த நிலைப்பாட்டை கடந்த காலங்களிலேயே வெளிப்படுத்தியுள்ளார். 2019ஆம் ஆண்டிலேயே அவர் தன்னை இலங்கைத் தமிழர் என்பதற்குப் பதிலாக தமிழ்க் கனேடியர் என்று அடையாளப் படுத்தியிருந்தார். அவரது பெற்றோர் போரின் காரணமாக இலங்கையிலிருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர்கள். சிறுவயதில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டங்களிலும் அவர் தனது குடும்பத்துடன் பங்கேற்றுள்ளார். இப்போது தனது புதிய திரைப்படத்தின் மூலம் உலகளாவிய பார்வையாளர்களைச் சந்திக்கும் தருணத்தில், தனது அடையாளத்தை அவர் இன்னும் தெளிவான உரையாடலாக மாற்றத் தொடங்கியுள்ளார்.

அதுவே ஒரு பகுதி சிங்களப் பேரினவாதிகளுக்கு ஏற்றுக்கொள்ள முடியாததாக மாறியுள்ளது. சமூக வலைத்தளங்களில் அவரைத் தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்துவதோடு நின்றுவிடாமல், அவர் நடித்த திரைப்படத்தையும் இலக்காகக் கொண்டு கடுமையான இனவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் இணையத்தில் முன்னெடுக்கப்பட்டன. திரைப்படத்தைப் பார்க்காமலேயே குறைந்த மதிப்பீடு வழங்குமாறு சில சமூக வலைத்தளப் பக்கங்கள் தங்கள் ஆதரவாளர்களைத் தூண்டியதாகவும், செயற்கை நுண்ணறிவு கருவிகளைப் பயன்படுத்தி எதிர்மறை விமர்சனங்களை உருவாக்குமாறு வழிகாட்டப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எந்தவொரு மனிதனும் தனது அடையாளத்தை தானே தீர்மானிக்க வேண்டும். மதம், இனம், தேசம் சார்ந்துள்ள அடையாளங்கள் வெறுமனே வலிந்த திணிப்புக்களால் மாத்திரம் உருவாகுவதில்லை. இலங்கையில் பிறந்த தமிழர்களின் அடையாளத்தை ஸ்ரீலங்கா என்ற தேசிய அடையாளத்துக்குள் மட்டும் அடைத்துவிட வேண்டும் என்ற பேரினவாத எண்ணமே இந்த எதிர்வினையின் அடிப்படையில் இருப்பதாகத் தெரிகிறது. மைத்ரேயி அந்த எல்லையை மறுத்திருக்கிறார். அப்படி மறுப்பதற்கான உரிமை மைத்ரேயிக்கும் இலங்கையில் வாழ்பவர்களுக்கும் இருக்கிறது.

### புலம்பெயர் தலைமுறையின் அடையாளத் தேடல்

இலங்கையில் முப்பதாண்டுகளாக நடந்த போர் பல தமிழ் குடும்பங்களை உலகின் பல திசைகளுக்கு அலைய வைத்துள்ளது. கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா என புலம்பெயர்ந்த தமிழ் சமூகங்கள் உருவாகின. முதல் தலைமுறை தமது மண்ணை இழந்து வாழ்ந்தது. இரண்டாவது தலைமுறை தமது பெற்றோரின் நினைவுகளுக்குள் மண்ணைத் தேடியது. மூன்றாவது தலைமுறை இப்போது அந்த மண்ணின் பெயரையே தேடுகிறது.

ஒரு குழந்தை கனடாவில் பிறந்தால் அது கனடாவின் குடிமகன். அக்குழந்தை கனடாவில் பள்ளி சென்று ஆங்கிலத்தில் படித்தாலும் வீட்டுக்குள் மூதாதையர்களின் கதைகளை தமிழில் கேட்பது அக்குழந்தையின் வாழ்வியலாகும். அக்குழந்தையின் வீட்டில் சமையலறையில், கோயில் திருவிழாவில் ஒரு தமிழர் பண்பாடு தலைமுறைகளையும் தாய்நிலத்தையும் இணைக்கின்றது. அந்தக் குழந்தையின் தாய், தந்தை, மூத்தோர்களின் நினைவுகளின் வழியாக ஒரு நாடு உருவாகிறது. அதுதான் புலம்பெயர் தலைமுறையின் அடையாளத் தேடலாகவும் நினைவில் உள்ள நாடாகவும் விரிகிறது.



மைத்ரேயி தனது திரைப்படத்தில்கூட இந்த வேறுபாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். முன்னர் கதாபாத்திரம் தமிழ் இலங்கையர் என்று கூறும் வகையில் இருந்த வசனத்தை மாற்றி, "I'm Tamil. My family's from Sri Lanka" என்று சொல்ல வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். இது வெறும் வசன மாற்றமல்ல. தான் யார் என்பதையும், தனது குடும்பம் எங்கிருந்து வந்தது என்பதையும் வேறுபடுத்திப் பார்க்கும் அடையாள அரசியலின் தேடலாக அவருக்குள் எழுந்திருக்கிறது.

### வேர்களைத் தேடும் ஒரு தலைமுறை

புலம்பெயர் தமிழர்களின் இன்றைய தலைமுறை தமது பூர்வீக நிலத்துடனான உறவையும் மீளக் கட்டமைக்கிறது. அத்துடன் தமிழ் மொழியைக் கற்கிறார்கள். தமிழ் பாடசாலைகள் மிக முக்கியமான பண்பாட்டு கடத்தல் நிலையங்களாக மாறியுள்ளன. கோயில்களை அமைத்தல், இலக்கியங்களை வெளியிடுதல், தாயகத்தில் கல்வி, மருத்துவம், சமூகப் பணிகளுக்கு உதவுதல், தமது ஊர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தல் போன்ற செயற்பாடுகளின் வழியாக தாய்நிலத்திற்கும் புலம்பெயர் தேசத்திற்குமான பிணைப்பு வலுக்கிறது.

அத்துடன் தமிழர் தேசத்தின் எரியும் பிரச்சினைகளான நடந்த இனவழிப்புப் போர், காணாமல் ஆக்கல்கள், இனப்படுகொலை, இடப்பெயர்வு ஆகியவற்றின் நினைவுகளையும் அடுத்த தலைமுறையினர் ஏதோ ஒரு வகையில் அறிந்தும் கற்றும் கொள்கின்றனர். இதனால் அடையாளம் என்பது ஒரு அரசியல் முழக்கமாக இல்லாமல் உணர்வுபூர்வமான விடயமாக வளர்கிறது.



### உலக அரங்கில் புலம்பெயர் தமிழர்களின் புதிய வகிபாகம்

புலம்பெயர் தமிழர்களின் முக்கியத்துவத்தை இன்றைய காலத்தில் பணம் அனுப்பும் சமூகமாக மாத்திரம் பார்த்துவிட முடியாது. உலக அரசியலைப் புரிந்துகொள்ளும், மனித உரிமைகளைப் பேசும், கலை மற்றும் ஊடகங்களில் தமது குரலை உருவாக்கும், பல்வேறு நாடுகளின் அரசியல் மற்றும் அறிவுசார் தளங்களில் பங்கேற்கும் ஒரு சமூகமாக அவர்கள் வளர்ந்துள்ளனர். அந்த வகையில் மைத்ரேயி போன்றவர்கள் இந்த மாற்றத்தின் புதிய முகம்.




ஒரு நடிகைக்கு கிடைக்கும் உலகளாவிய காட்சி தளம், ஒரு அரசியல் மேடையைவிட சில நேரங்களில் அதிகமான மக்களைச் சென்றடையக்கூடியது. அவர் தனது அடையாளத்தைப் பற்றி பேசும்போது உலகின் பல பகுதிகளில் வாழும் இளம் தமிழர்களும் தங்களைப் பற்றி மீண்டும் சிந்திக்கத் தொடங்குகிறார்கள். பிரித்தானியா மற்றும் கனடாவில் உள்ள தமிழ் மாணவர் அமைப்புகள் மைத்ரேயிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்திருப்பதும் இதன் ஒரு வெளிப்பாடாகும்.

ஸ்ரீலங்கா அரசும் சிங்களப் பேரினவாதிகளும் ஸ்ரீலங்கன் என்ற அடையாளத்திற்குள் ஈழத் தமிழ் மக்களை அமுக்கி இனவழிப்புச் செய்துவிடலாம் என்று எண்ணுவதன் வெளிப்பாடுதான் மைத்ரேயி அவர்கள்மீதான வெறுப்பு மற்றும் எதிர்ப்பின் அடிப்படை. இது போர் முடிந்த பிறகு, ஈழத் தமிழ் மக்களின் வீடுகளில், கடைகளில் ஸ்ரீலங்கா கொடியை இராணுவம் செருகிவிட்டு, சுதந்திரதினம் கொண்டாடும்படி நிர்ப்பந்தித்த விடயத்திற்கு ஒப்பானது. மைத்ரேயி விவகாரத்தில் பன்னாட்டுச் சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டிய முக்கிய விடயம் ஒன்று இருக்கிறது. கனடாவில் பிறந்து வளர்ந்த ஒரு பிள்ளையையே இந்தளவுக்கு சிங்களப் பேரினவாதம் ஒடுக்க நிற்கிறது என்றால் ஈழத்தில் பிறந்து வாழ்கிற பிள்ளைகளுக்கு எந்தளவு ஒடுக்குமுறை இருக்கும்?

• • •




**மட்டு.நகரான்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்ணையாளர்களின் வாழ்வாதார மையமாகவும், பாரம்பரிய மேய்ச்சல் தரையாகவும் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் எல்லைப் பகுதியாகவும் திகழும் மயிலத்தமடு மற்றும் மாதவ னைப் பகுதிகளில் தமிழ் பண்ணையாளர்களுக்கு எதிரான அராஜகங்களும் அடாவடிகளும் மீண்டும் தீவிரமடைந்துள்ளன.



ஜனாதிபதி அவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்தபோது மயிலத்தமடு,மாதவனை கால்நடை பண்ணையாளர்களுக்கு 1540 ஏக்கர் காணிகளை ஒதுக்குவதாகவும் சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்களை அகற்றுவதாகவும் வாக்குறுதியளித்து நான்கு மாதங்களை கடந்துள்ள நிலையில் இன்றைய தினம் அப்பகுதியில் உள்ள கால்நடை பண்ணையாளர்களை வெளியேற்றி அங்குள்ள சிங்கள அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களுக்கு காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்பு மண்ணில் இன்று அரங்கேறி வரும் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புகளும், பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் நேற்றோ இன்றோ திடீரென உருவானவை அல்ல. இவை பல தசாப்தங்களாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பு நாடகத்தின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளன. வரலாற்று ரீதியாகத் தமிழர்களின் வாழ்வியல் மற்றும் விவசாய நிலங்களைச் சிறுகச் சிறுகக் கையகப்படுத்தும் முறையான திட்டங்கள் கிழக்கில் இன்றும் தொடர்கின்றன.இதற்கு காலத்திற்கு காலம் ஆட்சிக்குவரும் பெரும்பான்மை சிங்கள பௌத்தமேலாதிக்க அரசாங்கங்களும் ஆதரவு வழங்கியே வருகின்றது.

அண்மைக்காலமாக முகநூல் ஊடாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் அவர்கள் திவுலப் பொத்தனை என்னும் சிங்கள பகுதியில் காலம் காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிங்கள விவசாயிகளை விரட்டுவதற்கு மாடுகளை வளர்ப்போர் செயற்பட்டுவருவதாகவும் அதற்கு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பின்புலமாக இருப்பதாகவும் திவுலப்பொத்தனையினை பாதுகாக்க சிங்கள மக்களை ஒன்றுதிரளுமாறும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவருகின்றார்.2020ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த அனுராதா ஜகம்பத் என்பவரே இப்பகுதியில் சிங்கள மக்களை கொண்டு குடியேற்றுவதில் தீவிர செயற்பாட்டினை மேற்கொண்டுவரும் நிலையில் அதற்கு ஆதரவான போக்கினையே சிங்கள பொலிஸாரும் மகாவலி திணைக்களமும் பின்பற்றிவருகிறது.

1950-களில் டி.எஸ். சேனநாயக்க அவர்களின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களே இதன் தொடக்கப்புள்ளியாகும். மட்டக்களப்பின் மேற்குப் பகுதியில் பாய்ந்தோடிய 'பட்டிப்பளை ஆறு' 1951 இல் 'கல் ஓயா' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அன்றைய கல்முனைத் தொகுதி மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த நிலையில், அங்குள்ள அடர்ந்த மழைக்காடுகள் அழிக்கப்பட்டு சுமார் ஒரு லட்சம் ஏக்கரில் தென்னிலங்கை வாசிகள் குடியேற்றப்பட்டனர்.

இக்குடியேற்றப் பரப்பிற்குள் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாகப் பயிர்செய்து வந்த சுமார் 25,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட உறுதிக்காணிகளும் சிக்கிக்கொண்டன. கோணாவளைக்கண்டம் போன்ற வளம் கொழிக்கும் நெல் வயல்கள், மாடுகளைச் சாட்டாக வைத்து நடத்தப்பட்ட அராஜகங்களால் தமிழர்களிடம் இருந்து கை நழுவிப் போயின.

குடியேற்றப் பகுதியில் வாழ்ந்த சிங்கள விவசாயிகள் தமது மாடுகளைக் கட்டாமல் தமிழ் மக்களின் நெல் வயல்களுக்குள் மேய விட்டனர். தமிழ் மக்கள் அம்மாடுகளைக் கட்டும்போது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யச் சென்றபோது, அவர்களுக்கே அநீதியும் தண்டனையும் கிடைத்தன.

தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் பாதுகாப்பற்ற சூழல் காரணமாகத் தமிழ் மக்கள் தமது பொன்னான காணிகளை அடிமட்ட விலைக்கு விற்க நிர்பந்திக்கப்பட்டனர். 1962 முதல் 1965 வரையான காலப்பகுதியில் துறைநீலாவணை மக்களின் உறுதிக்காணிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பறிபோயின.பறங்கியர்வட்டை,மாக்காண்டி,புளியங்குளத்து முன்மாரி, கோம்பானை போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ் விவசாய நிலங்கள் இவ்வாறே கைமாறின.



அன்று அம்பாறையில் அரங்கேறிய அதே நாடகம், இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையோரப் பகுதியான மாதவனை-மயிலத்தமடு மற்றும் திம்புலபொத்தானைப் பகுதிகளில் வேறு வடிவத்தில் அரங்கேறுகிறது.

மகாவலி 'எல்' வலயத்தினூடாக மணலாறு எவ்வாறு 'வெலி ஓயா' எனப் பெயர் மாற்றப்பட்டதோ, அதேபோன்று மகாவலி 'பி' வலயத்தின் ஊடாக மட்டக்களப்பின் பெரு நிலப்பரப்பையும் பொலன்னறுவையின் சில பகுதிகளையும் இணைத்து 'திம்புலபொத்தானை' எனும் புதிய எல்லைக் கட்டமைப்பை ஆக்கிரமிப்பாளர்கள் உருவாக்கி வருகின்றனர்.

இன்று மட்டக்களப்பு மாதவனைப் பகுதியில் பாரம்பரியமாக மேய்ச்சலில் ஈடுபடும் தமிழ் பண்ணையாளர்களின் பசுக்கள் மீது தாக்குதல் நடத்துதல், மாடுகளைச் சுடுதல், மேய்ச்சல் நிலங்களை தீயிட்டுக் கொளுத்துதல் மற்றும் பயிர்ச்செய்கை என்ற பெயரில் மேய்ச்சல் தரைகளை உழுதல் போன்ற அராஜகங்கள் தொடர்கின்றன. பண்ணையாளர்கள் மீது தவறான பிரசாரங்களை மேற்கொண்டு, அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.

அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்ட எல்லைக்குள் இருந்த திம்புலபொத்தானை எவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குள் ஊடுருவியது என்பது பற்றி மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் இன்றுவரை மௌனம் காப்பது வேதனைக்குரியது.

இத்தகைய திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகளும், பெயர் மாற்றங்களும், மேய்ச்சல் தரை அபகரிப்புகளும் தடுத்து நிறுத்தப்படாவிட்டால், அடுத்த சில தசாப்தங்களில் மட்டக்களப்பில் தமிழர்களின் பாரம்பரிய நில இருப்பும் அடையாளமும் பெருமளவில் கேள்விக் குறியாகும் நிலையுருவாகும்.

மயிலத்தமடு,மாதவனைப்பகுதியில் குறிப்பாக நான்தற்போதுஇந்தகட்டுரையினைஎழுதிக்கொண்டிருக்கும் புதன்கிழமை மாலை 6.00மணியளவில் கரடியனாறு பொலிஸாரும் அருகன்வல பொலிஸாரும் அப்பகுதியில் காலம்காலமாக கால்நடைகளை வளர்க்கும் கால்நடை பண்ணையாளர்களை மாடுகளை அப்பகுதியிலிருந்து கொண்டுசெல்லுமாறும் அப்பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளதுடன் பண்ணையாளர்களை கடுமையாக எச்சரித்தும் இருக்கின்ற னர்.



இந்தபிரச்சினைகுறித்துஅண்மையில்நடைபெற்ற மட்டக்களப்பு அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டத்தின்போது அங்குள்ள சிங்கள அத்துமீறிய குடியேற்றவாசிகளுக்கு சாதகமான முறையிலேயே அமைச்சர் சுனில் ஹெந்து நெத்தியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதாவது சிங்கள விவசாயிகளுக்கு அப்பகுதியில் விவசாயம் செய்ய அனுமதி வழங்கி அவர்களின் விவசாய நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் கால்நடை பண்ணையாளர்களுக்கு தீர்வினை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இந்த செயற்பாடு என்பதே சிங்கள அத்துமீய பயிர் செய்கை முன்னெடுப்போரின் நடவடிக்கைக்கு முழுதையான ஆதரவினை வழங்கும் செயற்பாடாகும்.அவர்கள் விவசாய நடவடிக்கை முடியும் வரையில் கால்நடை களை காடுகளுக்குள் கொண்டுசெல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.காடுகளுக்குள் கால்நடைகளை வளர்க்கமுடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த நிலையில் இவ்வாறான தீர்மானம் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.இந்த நடவடிக்கைகளுக்கு எமது தமிழ் அரசியல்வாதிகள் தமது எதிர்ப்பினை கடுமையாக தெரிவித்திருக்கவேண்டும். ஆனால் அங்கு பேசிவிட்டு தமிழ் அரசியல்வாதிகள் கலைந்துசென்றுவிட்டனர்.

இவ்வாறான நிலையில் இன்று மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினையென்பது மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்களை முன்னெடுப்பதற்கு மிக மோசமான வழிமுறைகளை இன்றைய ஆட்சியாளர்கள் கைக்கொள்வதை காணமுடிகின்றது.

இது வெறும் மேய்ச்சல் தரை அல்லது விவசாயத் தகராறு மட்டுமல்ல இதன் பின்னணியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமித்து, கிழக்கின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நீண்டகால அரசியலும் திட்டமிட்ட நிலப்பறிப்பும் அடங்கியுள்ளது.

மகாவலி அபிவிருத்தி மண்டலங்களின் பெயராலும், திம்புலபொத்தானை போன்ற எல்லைக் கிராமங் களை விரிவாக்கும் பெயராலும் தமிழ் மக்களின்

தொடர்ச்சி: பக்கம் 15




**பாகம் 1**

1987 அக்டோபர் 10 அன்று இரண்டாம் லெப்டினன்ட் மாலதி வீரமரணம் அடைந்து முப்பத்தொன்பது ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், ஈழத் தமிழ் தேசத்தின் அரசியல் உணர்வில் அவரது மரபு இன்றும் ஆழமான இடத்தைப் பிடித்துள்ளது. தலைமுறைகளாக நிலவி வந்த ஆணாதிக்க எதிர்பார்ப்புகளுக்கு சவால் விடுத்த அவரது வாழ்க்கை, தமிழ் பெண்மையின் பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெறும் சாட்சிகளாக மட்டுமல்லாமல், அரசியல் செயல்பாட்டாளர்களாகவும், தலைமைத்துவத்தை ஏற்பவர்களாகவும், தங்கள் மக்களின் வரலாற்றுப் பாதையை வடிவமைப்பவர்களாகவும் பெண்கள் திகழ முடியும் என்பதை அவர் நிரூபித்தார். தேசிய விடுதலைக்கான பொறுப்புகள் ஆண்களுக்கு மட்டுமே உரியவை என்ற எண்ணத்தை அவர் முன்னிறுத்திய மாற்றம் தகர்த்தெறிந்ததால், தமிழ் தேசத்தைப் பொறுத்தவரை இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் முக்கியத்துவம் அவரது மரணச் சூழலையும் கடந்து நிற்கிறது.



2026-இல் தமிழ் பெண்கள் எழுச்சி நாளை நாம் நினைவுகூரும் வேளையில், அந்த நினைவுகூரல் என்பது முந்தைய தலைமுறைப் பெண்களைக் கௌரவிப்பதோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. விடுதலைப் போராட்டத்தின் போது தமிழ் பெண்கள் ஏற்றுக்கொண்ட அசாதாரணமான அரசியல் பொறுப்புகளுக்கும், சமகாலத் தமிழ் சமூகத்தின் சில பிரிவுகளில் அர்த்தமுள்ள தலைமைத்துவத்திற்கான வாய்ப்புகள் தொடர்ந்து குறைவாக இருப்பதற்கும் இடையிலான சங்கடமான முரண்பாட்டை எதிர்கொள்ள அது நம்மைத் தூண்ட வேண்டும். நிலைபெற்ற படிநிலைகளை (hierarchies) எதிர்த்த பெண்களை நாம் கொண்டாடுகிறோம்; ஆனால், இளம் பெண்கள் அரசியல் அதிகாரத்தைச் செலுத்த முற்படும்போதோ, நிலைபெற்ற தலைமைத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கும்போதோ அல்லது தங்கள் தேசத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் சுதந்திரமாகப் பங்கேற்கும் போதோ, அதே படிநிலைகளை மீண்டும் உருவாக்கும் போக்கு அடிக்கடி காணப்படுகிறது.

மாலதியின் மரபின் முக்கியத்துவம் அவரது தலைமுறை சாதித்தவற்றில் மட்டுமல்ல, அவரைத் தொடர்ந்து வந்தவர்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளிலும் அடங்கியுள்ளது. ஒரு தேசம் தனது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டுள்ளது என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழ் ஈழத்திற்கான போராட்டம் அமைந்திருக்குமானால், தமிழ் பெண்களின் விடுதலையும் அந்த இலட்சியத்தின் மையமாகத் திகழ வேண்டும். வெளிப்புற ஆதிக்கத்திலிருந்து விடுதலை அர்த்தமுள்ள வகையில் கோரும் ஒரு தேசம், தனது சொந்த அரசியல் நிறுவனங்களிலிருந்து பெண்களை விலக்கி வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது; அதேபோல, வரலாற்று ரீதியான அங்கீகாரத்தைச் சமகாலச் சமத்துவமாக மாற்றத் தவறும் நினைவுகூரல்கள் மூலம் முந்தைய தலைமுறையினரின் தியாகங்களைச் சரியான முறையில் கௌரவிக்க முடியாது. இரண்டாம் லெப்டினன்ட் மாலதியும் தமிழ் பெண்மையின் மாற்றமும் தமிழ் ஈழத்தின் மன்னாரில் பிறந்த இரண்டாம் லெப்டினன்ட் மாலதி, அரசியல் பாகுபாடு, அரச வன்முறை மற்றும் தமிழர்களின் தேசிய அபிலாஷைகள் படிப்படியாக மறுக்கப்பட்ட சூழலால் தங்கள் வாழ்வு வடிவமைக்கப்பட்ட ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர்.

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
வழக்கறிஞர், அவுஸ்திரேலியா.
பேச்சாளர், தமிழ் ஏதிலிகள் கழகம்.

1948-ல் சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் எதிர்கொண்ட பாகுபாட்டுக் கொள்கைகள், இனக் கலவரங்கள் மற்றும் தமிழர்களின் குறைகளுக்குத் தீர்வு காண்பதில் அடுத்தடுத்து வந்த அரசியலமைப்பு ஏற்பாடுகள் தோல்வியடைந்தது போன்றவை, தேசிய சுயநிர்ணய உரிமையை மையமாகக் கொண்ட ஒரு அரசியல் உணர்வு வளர்வதற்கு வித்திட்டன.

தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கேற்றது தமிழ் பெண்களுக்கு, பொது வாழ்வில் அவர்களின் பங்கை வரலாற்று ரீதியாகக் கட்டுப்படுத்தி வந்த ஆழமான சமூக எதிர்பார்ப்புகளுக்கு சவால் விடுப்பதாகவும் அமைந்தது. அரசியல் தலைமைத்துவம் மற்றும் கூட்டுப் பாதுகாப்பு சார்ந்த விவகாரங்கள் ஆண்களுக்கு மட்டுமே உரியவை எனக் கருதப்பட்ட நிலையில், பெண்கள் பெரும்பாலும் வீட்டுக்குள்ளான மற்றும் துணை நிற்கும் பணிகளிலேயே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர்.



இந்தக் கண்ணோட்டங்களுக்கு சவால் விடுத்த தலைமுறை யின் அடையாளமாக இரண்டாம் லெப்டினன்ட் மாலதி திகழ்ந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் அவர் பங்கேற்றது பெண்களின் பொறுப்புகள் குறித்த வழக்கமான புரிதல்களிலிருந்து மாறுபட்ட ஒரு முன்னெடுப்பாக அமைந்தது; அதேவேளையில், 1987 அக்டோபர் 10 அன்று இந்திய அமைதி காக்கும் படையுடனான மோதலில் அவர் உயிரிழந்த நிகழ்வு, இவ்வியக்கத்தில் பெண்களின் பங்கேற்பு வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது.

அதன்பின்னர் 'மாலதி படையணி' (Malathy Brigade) உருவாக்கப்பட்டதும், 'தமிழ் பெண்கள் எழுச்சி நாள்' அனுசரிக்கப்பட்டதும் அவரது நினைவுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தைப் பிரதிபலித்தன. அதனைத் தொடர்ந்து பெண்கள் இராணுவம், மருத்துவம், நிர்வாகம் மற்றும் அரசியல் கட்டமைப்புகளில் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர்; பாலினம் மற்றும் அதிகாரம் குறித்த நிறுவப்பட்ட கருத்துகளுக்கு சவால் விடும் வகையிலான திறன்களை அவர்கள் வெளிப்படுத்தினர்.

ஆயுதமேந்திய அமைப்புகளில் பங்கேற்பது என்பது முழுமையான விடுதலையையோ அல்லது உள்ளக ஏற்றத்தாழ்வுகளிலிருந்து முழுமையான விடுபடுதலையோ கட்டாயம் உறுதிசெய்துவிடும் என்று கூறாமலேயே, இந்த மாற்றத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும். ஆயினும், இக்காலகட்டத்தில் பெண்கள் வெளிப்பட்ட விதமும் அவர்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளும் சமூக எதிர்பார்ப்புகளை அடிப்படையிலேயே சவால் செய்தன; அத்துடன், தமிழ் சமூகத்தில் பாலின சமத்துவம் குறித்த விவாதங்களில் இன்றும் பொருத்தமானதாகத் திகழும் ஒரு மரபை அவை உருவாக்கின.

### தேசிய விடுதலை மற்றும் ஆணாதிக்கத்தை எதிர்கொள்ளும் பொறுப்பு

2026-இல் தமிழ் தேசம் எதிர்கொள்ளும் மிக முக்கியமான முரண்பாடுகளில் ஒன்று இதுதான்: ஆணாதிக்கக் கட்டமைப்புகளைத் தங்கள் வாழ்வின் மூலம் சவால் செய்த பெண்களை நினைவுகூரும் அரசியல் அமைப்புகளுக்குள்ளேயே, அதே ஆணாதிக்க நடைமுறைகள் தொடர்ந்து நிலவுகின்றன.



தமிழ் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்கள் எங்கும், சமூகக் கட்டமைப்பு, அரசியல் முன்னெடுப்புகள், கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமானச் செயல்பாடுகள் ஆகியவற்றில் பெண்கள் மையப் பங்காற்றுகின்றனர். இருப்பினும், அவர்களின் பங்களிப்புகள் எப்போதும் அரசியல் முடிவுகளில் சமமான அதிகாரமாக மாறுவதில்லை; குறிப்பாக, நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தும் ஆண்களின் கைகளிலேயே தலைமைத்துவம் குவிந்திருக்கும் சூழலில் இது அதிகம் காணப்படுகிறது.

பங்கேற்புக்கும் தலைமைத்துவத்துக்கும் இடையிலான இந்த வேறுபாடு மிக முக்கியமானது. அவ்வரசியல்உத்திகள்அல்லதுபிரதிநிதித்துவம்தொடர்பான விவாதங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தாலும், பெண்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம், பிரச்சாரங்களை ஒருங்கிணைக்கலாம் மற்றும் சமூக ஆதரவைத் திரட்டலாம். இத்தகைய நடைமுறைகள், கூட்டு முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதில் பெண்களைச் சமமான பங்கேற்பாளர்களாக அங்கீகரிப்பதற்குப் பதிலாக, அவர்களின் அரசியல் பங்களிப்பை வெறும் 'துணை நிற்கும் பொறுப்புகளாக' மட்டுமே சுருக்கிவிடுகின்றன.

தமிழ் ஈழம் என்பதற்கான வேட்கையானது 'தேசிய சுயநிர்ணய உரிமை' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருந்தால், அப்போலிட்டிக்கல் குறிக்கோளின் இன்றியமையாத அங்கமாகப் பெண்களின் அர்த்தமுள்ள பங்கேற்பு கருதப்பட வேண்டும். 'குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை' மற்றும் 'பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை' ஆகியவற்றின் பொதுவான விதி 1 (Common Article 1), அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அங்கீகரிக்கிறது; இதில் தங்கள் அரசியல் நிலையைத் தீர்மானிப்பதும், தங்கள் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சியை முன்னெடுப்பதும் அடங்கும்.

தனி அரசு கோரிக்கைகளுக்கு இக்கோட்பாட்டைச்

**தொடர்ச்சி: பக்கம் 15**




அண்மையில் சட்ட விசாரணை ஒன்றுக்காக, நீதி மன்றம் சென்றிருந்தேன். எனக்கான விசாரணை பிரிவுக்கு செல்லாமல், தவறுதலாக சிறுவர் விசாரணை மற்றும் தாபரிப்பு வழக்கு விசாரணை பகுதிக்குச் சென்று விட்டேன்.



கையில் அலைபேசி இல்லை, கைபையில் புத்தகம் மட்டும் இருந்தது, அதுவும் 33 வருடங்கள் அயல் நாட்டில் சிறைவாசம் அனுபவித்த சாந்தன் அண்ணா எழுதிய 'தூக்கிலிடப்படும் அறை' சிறுகதை தொகுப்பு. வேறு எந்த கவனச்சிதறல்களும் இல்லை, அதாவது தெரிந்த மனிதர்கள், நண்பர்கள் இப்படி அருகில் யாரும் இல்லை. நான் உள்ளே சென்ற போது, நேரம் 8.45 இருக்கும். நீதிபதி வரவில்லை, குழந்தைகள் சிலர் அங்கும் இங்குமாக ஒடிக் கொண்டிருந்தனர்.

' நீதிமன்றம் வருகிற வயதா இவர்களுக்கு' என நினைத்துக் கொண்டே, அவர்களைப் பார்த்த போது, கனமான ஒன்று இதயத்தை இறுக்கியது.

' இந்தக் குழந்தைகள் எதற்காக இங்கு வந்திருக்கிறார்கள்? ' என்று எண்ணியபடி , கதிரை ஒன்றில் அமர்ந்தேன்.

எனது கதிரை வரிசையில் அமர்ந்திருந்த தாயொருவர், கண்களை கசக்கி அழுது கொண்டிருந்தார். மறு கரையில் பிள்ளைகள் அமரவைக்கப்பட்டிருந்தனர். சுமார் 4 வயது, 6 வயது மதிக்கத்தக்க குழந்தைகள், அந்தப் பெண் குழந்தை தான், தாயின் அருகில் ஓடி ஓடி வந்து, கதைத்துக் கொண்டிருந்தாள்.

தாயிடம் ஓடி வந்து, "அம்மா, அண்ணாக்கு பசிக்கிறதாம்... " என்றதும் கண்களை அவசரமாக துடைத்துக் கொண்ட அந்த தாய், எழுந்து வெளியே சென்று சில நிமிடங்களில் கையில் சிறு பொதியுடன் உள்ளே வந்தார். வாசலில் வரும்போதே தாயைக் கண்டுவிட்ட அந்தச் சிறு பெண், ஓடிச்சென்று அந்தப் பொதியை வாங்கினாள். வாங்கிக்கொண்டே, ஓடிப்போய் தமையனிடம் கொடுத்து, அதைப் பிரித்து இருவருமாக சாப்பிட்டனர். தாய், பார்த்துக்கொண்டே இருந்ததை நானும் பார்த்தேன்.



அந்த தாயின் தோற்றத்தை இங்கு கூறியே ஆக வேண்டும், மெலிந்த உருவம், ஒட்டி உலர்ந்திருந்த உதடுகள், நைந்து போன நீளமான சாம்பல் நிற சட்டை, உள்ளே அணிந்திருந்த ஆடை, வெளியே தெரியும்படியாக அங்கங்கே கிழிசல்கள், மெலிந்து முதுகோடு ஒட்டிக் கொண்டிருந்த கூந்தல், இப்படி.... பார்க்கும் போது, " ஐயோ, பாவம்" என சட்டென்று இரக்கத்தை உண்டு பண்ணுகிற ஒரு தோற்றம்.

சற்று நேரத்தில், நீதிபதி வரவும் எல்லோரும் எழுந்து நின்று கரம் குவித்து ' வணக்கம்' என்ற போது, அவரும் பதில் வணக்கம் கூறியபடியே தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

வழக்குகளை விசாரிக்க ஆரம்பித்தனர், எல்லாம் சிறுவர்கள் தொடர்பான வழக்குகள் தான், முதலில் ஒரு இளம்பெண், கைக்குழந்தையோடு எழுந்து சென்றார். மறுபக்கம் ஐந்து வயது சிறுவன் ஒருவனும் வயதான கணவன் மனைவி போல இருவர் அவனோடு சென்றனர். அப்பப்பா, அப்பம்மா என அங்கு கூறப்பட்டது.

அந்தப் பெண்ணின் கணவன் வரவில்லை, இந்தச் சிறுவன் முதல் தாரத்து பிள்ளையாம், கையில் இருந்த கைக்குழந்தை தற்போது இரண்டாவது திருமணம் செய்து பிறந்த குழந்தை எனவும் இதுவரை மாமனார் மாமியாரோடு வளர்ந்த மகனை, தன்னிடம் தருமாறு கோரி நீதிமன்றம் வந்திருந்தார். சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் விபரங்களை தெளிவாக கூறிக்கொண்டிருந்தார்.



நீதிபதி, அந்த முதியவர்களிடம், " இவனை உங்களால் வளர்க்கமுடியுமா" என்று கேட்டார். அவர்கள் தலை அசைத்து சம்மதம் தெரிவித்தனர். பின்னர், அந்தப் பெண்ணை விசாரணை செய்து விட்டு, மறு தவணைக்கு தற்போதைய கணவனையும் கூட்டிக்கொண்டு வருமாறு கூறி அனுப்பினார். ஏனெனில் அந்தச் சிறுவனை வளர்ப்பதில் இரண்டாவது கணவனுக்கு சம்மதம் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம் அல்லவா, அவருடைய அந்த வார்த்தைகளை கேட்ட அந்தப் பெண், முகத்தில் சிடுசிடுப்போடு வந்தபடி, எனக்கு அருகில் அமர்ந்திருந்த தாயாரிடம் " அவன் வரமாட்டான்" என்று கூறியபடியே கூட்டிச் சென்றதைக் கண்டபோது, ஊசலாடும் ஒரு குழந்தையின் உலகம் பற்றிய சிந்தனை எனக்குள் பெருமூச்சை வரவைத்தது.

பிறகு ஒரு இளம்பெண் அழைக்கப்பட்டார், மகளிர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த பிள்ளையை, பெற்றோரிடம் ஒப்படைக்க கோரிய மனு விசாரணை அது, வயதான தந்தையோடு தமக்கை, தமையன் இருவரும் வந்திருந்தனர். தாய் இல்லை போல, குடும்பத்தினரிடம் கூட்டிச் செல்வதற்கான விருப்பமும் அந்தப் பெண் பிள்ளையிடம், வீட்டுக்கு போவதற்கு விருப்பமா எனவும் விசாரிக்கப்பட்டது, அந்தப் பெண் பிள்ளை சம்மதித்ததும் " ஏதாவது பிரச்சினை என்றால் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம் என்ற தெளிவுபடுத்தலோடு அனுப்பி வைக்கப்பட்டார்.

கோபிகை

சிறிது நேரத்தில் முதலில் கூறிய அந்த, தாய் அழைக்கப்பட்டார். கணவன் சரியான குடிகாரனாம், போதைப்பொருள் பாவனையும் தான். தினம் தினம் குடித்து விட்டு வந்து அடியும் ஆய்க்கினையுமாக துன்புறுத்தியதில் தாங்க முடியாமல் தாய் வீட்டுக்கு போய்விட்ட அந்த பெண்ணிடம் இருந்து, பிள்ளைகளை வலுக்கட்டாயமாக கூட்டி வந்து விட்ட கணவனிடம் இருந்து பிள்ளைகளை வாங்குவதற்கு தான் நீதிமன்றம் வந்திருந்தார் அந்தப் பெண்.



பிள்ளைகள் இருவரிடமும் கேட்கப்பட்டு, அவர்கள் இருவரும் தாயுடன் போவதற்கு சம்மதித்த பின்னர், தாயுடனேயே அனுப்பி வைக்கப்பட்டனர். கழுத்தில் இருந்து வழிந்து விழுகிற அளவுக்கு பெரிய ஒரு சட்டையைத்தான் அந்த நான்கு வயது பெண் குழந்தை அணிந்திருந்தாள். ஆறுவயது மகனும், சுருங்கிப்போன சேட்டும் காற்சட்டையும் போட்டிருந்தான். இருவரையும் இரண்டு கைகளிலும் பிடித்துக்கொண்டு அந்தப் பெண் போவதைக் கண்ட போது, வேதனையாக இருந்தது.

இதுநாள்வரை, கணவனோடு துன்பப்பட்டிருக்கிறாள்,இடையில்தனக்காகஏதோஉழைத்துச்சாப்பிட்டிருப்பாள், இனி, கையில் இருக்கும் குழந்தைகளுக்காகவும் அவள் உழைக்க வேண்டும். தன்னுடைய ஆசைகளை, தன்னுடைய மகிழ்ச்சியை மனதோடு புதைத்து விட்டு, ஒரு வெறுமையான வாழ்க்கையை அவள் வாழ வேண்டும்.

அதன் பிறகு, சில தாபரிப்பு வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. இளம் வயது ஆண்களும் பெண்களும் வரிசையாக அழைக்கப்பட்டனர். ஆண் பிள்ளைகள் யாவரும் கலைந்த தலைமுடியும் நலுங்கிய தோற்றமுமாக காட்சியளித்தனர். அதாவது, மதுப்பாவனை, போதைப்பாவனை என்பவற்றுக்கு அடிமையாகியிருந்தனர். அவர்களுடைய தோற்றமே, அவர்களைப்பற்றிய உண்மையைச் சொன்னது. இவர்கள் எப்படி குடும்பத்தை கொண்டு நடத்துவார்கள்?

இத்தகைய இளைஞரோடு, பெண்களின் வாழ்க்கை என்பது எப்படி இருக்கும்? சிறந்த எதிர்காலத்தை இவர்கள் கனவு காண முடியுமா? வாழ்க்கை இனிமையானதாக இருக்குமா?

குற்றத்தை செய்வது யார், தண்டனை அனுபவிப்பது யார்? இப்படி எல்லாம் நிறைய கேள்விகளோடு அங்கிருந்து வெளியே வந்தேன்.

• • •




# மலையக மக்களின் சுயமரியாதையும் 'கள்ளத்தோணி' சொல்லாடலின் பின்னணியும்

இலங்கையின் பொருளாதாரத் தூண்களாகத் திகழும் மலையக பெருந்தோட்ட மக்கள், இன்றும் தங்களது அடிப்படை உரிமை சார்ந்த பிரச்சினைகளுடனும் அடையா ளச் சவால்களுடனும் போராடி வருகின்றனர். நுவரெலியா - லவர்ஸ்லீப் தோட்டத்தில் அண்மையில் வீடமைப்புப் பணியின் போது தோட்ட நிர்வாக அதிகாரி ஒருவரால் "கள்ளத்தோணி" என அங்கு பணியாற்றிய மக்கள் அவமதிக்கப்பட்ட சம்பவம், மலையக மக்களிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவத்தின் பின்னணியில், அம்மக்கள் எதிர்நோக்கும் வரலாற்று மற்றும் சமூக சவால்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது.



**கேள்வி 1. 'கள்ளத்தோணி' என்ற சொல் பயன்பாட்டிற்கான வரலாற்றுப் பின்னணி என்ன? அது உண்மையிலேயே சட்டவிரோதக் குடியேற்றத்தைக் குறிக்கிறதா?**

**பதில்:** 'கள்ளத்தோணி' என்ற சொல், வரலாற்று உண்மை களைப் புரிந்து கொள்ளாமல் உணர்ச்சிவசப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு தவறான அவதூறுச் சொல்லாகும். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் 1820களின் தொடக்கத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் ஆட்சி செய்தனர். அப்போது இலங்கையில் கோப்பி மற்றும் தேயிலை தோட்டங்களை உருவாக்குவதற்காகத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழிலாளர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அந்தக் காலப்பகுதியில் தற்காலத்தைப் போன்ற விசா அல்லது கடவுச்சீட்டு நடைமுறைகள் இருக்க வில்லை. பிரித்தானிய ஆட்சியாளர்களின் முழுமை யான அனுமதியுடனும், அவர்களின் ஏற்பாட்டிலுமே தொழிலாளர்கள் தோணிகள் (படகுகள்) மூலம் தலைமன்னாரை வந்தடைந்து, அங்கிருந்து அடர்ந்த காடுகளை அழித்து பாதை அமைத்து மலையகம் வந்தடைந்தனர். இது எந்த வகையிலும் திருட்டுத்தனமான அல்லது சட்டவிரோதமான குடியேற்றம் அல்ல. நாட்டின் பொருளாதாரத்தை உருவாக்க அதிகாரபூர்வமாக அழைத்து வரப்பட்ட மக்களை, அவர்களின் கடல்வழிப் பயணத்தை தவறாகச் சித்தரித்து 'கள்ளத்தோணி' என இழிவுபடுத்தும் போக்கே வரலாற்று ரீதியாகத் தொடர்ந்து வருகிறது.

**கேள்வி 2. நுவரெலியா லவர்ஸ்லீப் தோட்டத்தில் நடந்தது என்ன? இந்தச் சம்பவம் உணர்த்தும் உண்மை நிலை யாது?**

**பதில் :** லவர்ஸ்லீப் தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம், மலையக மக்கள் தமது சொந்த மண்ணிலேயே நில உரிமை மற்றும் சுயமரியாதையைப் பெற எதிர்கொள்ளும் போராட்டத்தை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது. தோட்டத் தொழிலாளி ஒருவர் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் தோட்ட நிர்வாகத்திடம் முறைப்படி அனுமதி பெற்று, அத்திவாரம் இட்டு வீடு கட்டும் பணியைத் தொடங்கியுள்ளார். பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி கார ணமாகப் பணியை இடைநிறுத்தி, வெளிநாடு சென்று உழைத்த பணத்தைக் கொண்டு மீண்டும் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளார். இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த தோட்ட உதவி முகாமையாளர், பிரதி முகாமையாளர் மற்றும் மேற்பார்வையாளர் ஆகியோர், நிர்வாக அனுமதி பெறவில்லை எனக் கூறி பணியை நிறுத்துமாறு வற்புறுத்தியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட வாக்குவாதத்தின் போதே, நிர்வாகத் தரப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தொழிலாளர்களை "கள்ளத்தோணி" என அவமதித்துள்ளார். இச்சம்பவத்தின் காணொளி சமூக வலைத்தளங்களில் பரவி, மக்களின் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. முறைப்படி அனுமதி கோரிய கடிதங்கள் மற்றும் ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ள நிலையில், இது தொடர்பான சுயாதீன விசாரணைக்கு கோரிக்கைகள் வலுத்துள்ளன.

**கேள்வி 3. இச்சம்பவம் தொடர்பாக அரசியல் தலைவர்களும் சமூக ஆர்வலர்களும் முன்வைக்கும் முதன்மையான வாதங்கள் யாவை?**

**பதில்:** இச்சம்பவம் வெறுமனே ஒரு தனிநபருக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான நிலத் தகராறு அல்ல. மாறாக, மனித உரிமை மற்றும் சுயமரியாதை சார்ந்த விடயம் எனப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் நாடாளு மன்றத்தில் இதுகுறித்து கருத்துரைக்கையில் "இது ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான அரசியல் பிரச்சினை அல்ல; மனித உரிமை சார்ந்த விடயம். தேயிலை அருந்துபவர்களுக்கு வழங்கப்படும் மரியாதை, தேயிலை பறிப்பவர்களுக்கு வழங்கப்படுகிறதா? நாட்டின் கடினமான காலங்களில் தேயிலை ஏற்றுமதி மட்டுமே பொருளாதாரத்தைக் காப்பாற்றியது.



அப்படிப்பட்ட மக்களின் உழைப்பிற்கு வழங்கப்படும் மரியாதை 'கள்ளத்தோணி' என்ற சொல்லாக இருப்பது வேதனையானது" எனக் குறிப்பிட்டதுடன், அரசு வெறும் அறிக்கைகளுடன் நின்றுவிடாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். அதேநேரம் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களின் காணி, வீட்டு உரிமை, மனித கண்ணியம் மற்றும் சமத்துவம் தொடர்பில் நீண்டகாலமாகப் பல்வேறு பிரச்சினைகள் தொடர்கின்றன. இவ்வாறான சம்பவங்களின் போது அரசும் அதிகாரிகளும் பொறுப்புடன் செயற்பட்டு, தவறிழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சமூக ஆர்வலர்களும் மலையக மக்களும் வலியுறுத்துகின்றனர்.

**கேள்வி 4. இலங்கையின் பொருளாதாரத்திலும் அடை யாளத்திலும் மலையக மக்களின் பங்களிப்பு எத்தகையது?**

**பதில்:** இலங்கையின் தேசிய பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் மலையகத் தமிழ் மக்களின் உழைப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது. இலங்கைக்கு உலகளாவிய

**மருதன் ராம்**

முகவரியையும் அடையாளத்தையும் பெற்றுத் தந்த 'சிலோன் டீ' (Ceylon Tea) மலையக மக்களின் இரத்தத்திலும் வியர்வையிலும் உருவானதாகும். நாட்டின் சுற்றுலாத் துறையோ அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு வரு மானமோ இல்லாத காலகட்டத்தில், இலங்கையின் முழு மையான பொருளாதாரச் சுமையைச் சுமந்தவர்கள் இம்மக்களே ஆவர்.




காடுகளாகக் கிடந்த மலையகப் பகுதிகளை உயிரைப் பணயம் வைத்து செழிப்பான தோட்டங்களாக மாற்றிய பெருமை இம்மக்களையே சாரும். "ஒவ்வொரு தேயிலைக் கன்றிலும் எங்களது முன்னோர்களின் கைரேகை உள்ளது" எனும் கூற்றுக்கேற்ப, இந்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் அவர்களின் உழைப்பு கலந்துள்ளது. இன்று மலையக மக்களை இழிவுபடுத்துவோரும், நாட்டின் ஏனைய பகுதி மக்களும் ஏதோவொரு வகையில் இம்மக்களின் ஏற்றுமதி உழைப்பினால் கிடைக்கும் தேசிய வருமானத்தின் பலனையோ அல்லது அவர்களின் சேவையையோ அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதே நிதர்சனம்.

**கேள்வி 5. இவ்வாறான இனரீதியான அவமதிப்புகளையும் நில உரிமையின்மையையும் களை எடுப்பதற்கான நிரந் தரத் தீர்வுகள் என்ன?**

**பதில்:** மலையக மக்கள் மீதான இழிவான சொல் லாடல்களுக்கும் உரிமை மீறல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் பல மட்டங்களில் மாற்றங்கள் அவசியமாகின்றன. பெருந்தோட்ட மக்களுக்குத் தங்களின் சொந்த நிலத்தில் சட்டபூர்வமான காணி உரிமையும், முறையான வீட்டு உரிமையும் வழங்கப்பட வேண்டும். தோட்ட நிர்வாகங்களின் தன்னிச்சையான அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி, ஏனைய குடிமக்களைப் போல உள்ளாட்சி மன்றங்களின் கீழ் வீடமைப்பு உரிமைகள் பரவலாக்கப்பட வேண்டும்.

'கள்ளத்தோணி' போன்ற இனரீதியான அவமதிப் புச் சொற்களைப் பயன்படுத்துவோருக்கு எதிராகக் கடு மையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரச நிறுவனங்களிலும் பெருந்தோட்ட நிர்வாகங்களிலும் பணியாற்றும் அதிகாரிகளுக்கு மனித உரிமை மற்றும் சமத்துவக் கல்வியளிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். மலையக மக்களின் 200 ஆண்டுகால தியாகத்தையும் பங்களிப்பையும் நாட்டின் பாடத்திட்டங்களிலும் தேசிய தளங்களிலும் சரியாகக் கொண்டு சேர்க்க வேண்டும். இதன் மூலமே வரலாற்று ரீதியான தவறான எண்ணக் கருத்துகள் மறைந்து, அவமதிப்புகளற்ற சுயமரியாதையுள்ள சமூக வாழ்வு உறுதி செய்யப்படும்.

மலையக மக்கள் வெறும் தொழிலாளர்கள் மட்டுமல்ல. இந்நாட்டின் பொருளாதார அமைப்பையும்

தொடர்ச்சி: பக்கம் 15




**பாகம் 3**

ஐந்தாவது கோரிக்கை: தமிழ் பாடசாலைகளிலிருந்து வெளியேறுதல் மற்றும் 'ஹோம் கார்ட்' (Home Guards) படையினரிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்தல்

இலங்கை இராணுவம் மற்றும் காவல்துறை ஆகியவை தமிழ் கிராமங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களிலிருந்து வெளியேற வேண்டும் என்றும், 'ஹோம் கார்ட்' படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் இந்தியக் கண்காணிப்பின் கீழ் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும் ஐந்தாவது கோரிக்கை வலியுறுத்தியது. பாதுகாப்பு மற்றும் பிராந்திய அதிகாரம் தொடர்பான பரந்த அரசியல் போராட்டத்தை, தமிழ் சமூகங்களின் அன்றாட வாழ்வியலோடு இந்தக் கோரிக்கை நேரடியாக இணைத்தது; ஏனெனில் பாடசாலைகள் என்பவை வெறும் பௌதீகக் கட்டடங்கள் மட்டுமல்ல; அவை மொழி, கலாச்சாரம், வரலாறு, அடையாளம் மற்றும் கூட்டு நினைவுகள் ஆகியவற்றை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் களங்களாகும்.



எனவே, கல்விச் சூழலுக்குள் இராணுவ அல்லது பாதுகாப்பு அமைப்புகளின் இருப்பு என்பது, ஒரு குறிப் பிட்ட கட்டடத்தை ஆக்கிரமிப்பது என்பதைத் தாண்டிய கேள்விகளை எழுப்புகிறது. சிவில் நிறுவனங்கள் இராணுவ அதிகாரத்திலிருந்து சுயாதீனமாகச் செயற்பட முடியுமா என்பதையும், கட்டாயப்படுத்தும் அரசக் கட்டமைப்புகளின் தொடர்ச்சியான இருப்பு இல்லாமலே குழந்தைகளும் சமூகங்களும் கல்வி மற்றும் கலாச்சார வாழ்வை அனுபவிக்க முடியுமா என்பதையும் இது கேள்விக்குள்ளாக்குகிறது. நீண்டகால அரசியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட சமூகங்களில்,சிவில் அதிகாரத்தை மீட்டெடுப்பதும்,சாதாரண சமூக வாழ்விலிருந்து இராணுவக் கட்டமைப்புகளைப் பிரிப்பதும் உண்மையான அரசியல் சுதந்திரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான இன்றியமையாத கூறுகளாக அமைகின்றன.

'ஹோம் கார்ட்' படையினர் தொடர்பான கோரிக்கையும் ஒரு முக்கிய கவலையை வெளிப்படுத்தியது. இன ரீதியாகப் பிளவுபட்ட சூழலில், தொழில்முறை பாதுகாப்பு அமைப்புகளுக்கு அப்பாற்பட்ட தரப்பினருக்கு ஆயுதங்களை வழங்குவது, பொதுமக்களின் பாதுகாப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் அரசின் ஆதரவு அல்லது அனுமதியுடன் செயல்படும் ஆயுதமேந்திய தரப்பினர் குறித்து அரசுக்குள்ள பொறுப்பு ஆகியவை தொடர்பான கேள்விகளை எழுப்பியது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், ஐந்தாவது கோரிக்கையின் இந்த அம்சங்கள் ஒரு பரந்த கொள்கையை வெளிப்படுத்தின: தமிழ் மக்களின் சிவில் வாழ்வு நிரந்தரமாக இராணுவமயமாக்கலைச் சார்ந்ததாக இருக்கக்கூடாது.

எனவே, இந்தக் கோரிக்கை சுயநிர்ணய உரிமை தொடர்பான கேள்வியின் ஒரு பகுதியாகவும் அமைகிறது; ஏனெனில் அர்த்தமுள்ள அரசியல் சுதந்திரத்திற்கு, காகிதத்தில் எழுதப்பட்ட அரசியலமைப்பு விதிகள் மட்டும் போதாது. சிவில் அரசியல் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகங்கள் ஆகியவை எங்கும் நிறைந்திருக்கும் கட்டாயக் கட்டுப்பாடுகள் இன்றிச் செயற்படக்கூடிய ஒரு சூழல் அதற்குத் தேவைப்படுகிறது. பாதுகாப்புத் துறை சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ இருப்பைக் குறைக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் 'கட்டாயக் காணாமல் போதல்கள் தொடர்பான குழு' (UN Committee on Enforced Disappearances) 2025-லும் கூட பரிந்துரைத்து வந்தது என்பது, அப்பகுதிகளில் இராணுவமயமாக்கல் தொடர்பான கேள்விகள் இன்றும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை உணர்த்துகிறது.

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
வழக்கறிஞர், அவுஸ்திரேலியா.
பேச்சாளர், தமிழ் ஏதிலிகள் கழகம்.



இந்த ஐந்து கோரிக்கைகளும் இறுதியில் அரசியல் அதிகாரம் சார்ந்தவையே இந்த ஐந்து கோரிக்கைகளையும் ஒன்றாக ஆராயும்போது, பரந்த அளவிலான தமிழ் தேசியப் பிரச்சினையுடனான அவற்றின் தொடர்பு மிகவும் தெளிவாகிறது. முதலாவது சுதந்திரம் மற்றும் தடுப்புக்காவல் தொடர்பானது; இரண்டாவது நிலம் மற்றும் பிராந்தியத் தொடர்ச்சி சார்ந்தது; மூன்றாவது அரசாங்கம் மற்றும் நிர்வாக அதிகாரம் தொடர்பானது; நான்காவது காவல் துறை மற்றும் அரசின் கட்டாய அதிகாரத்தைப் பற்றியது; ஐந்தாவது இராணுவமய நீக்கம் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு சார்ந்தது. இவை அரசியல் இருப்பின் ஏதோ ஒரு புறநிலை அம்சங்கள் அல்ல; மாறாக, இறைமையும் அரசாங்க அதிகாரமும் செயற்படுத்தப்படும் அடிப்படை அதிகாரங்களில் இவை அடங்கும்.



இதனால்தான், 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்து கோரிக்கைகளை, 1987-இல் இந்தியா நிறைவேற்றத் தவறிய வெறும் கோரிக்கைகளாக மட்டும் பார்க்கக்கூடாது. ஆழமான தமிழ்த் தேசியப் பிரச்சினை வெளிப்படும் ஒரு அரசியல் கட்டமைப்பாகவும் அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்; ஏனெனில், ஏறக்குறைய ஒவ்வொரு கோரிக்கையும் இறுதியில் வெவ்வேறு வடிவங்களில் ஒரே கேள்வியையே முன்வைக்கிறது: தமிழர்களின் தாயகப் பகுதியில் என்ன நடக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

அந்தக் கேள்வி நேரடியாகவே 'சுயநிர்ணய உரிமை'யை நோக்கி இட்டுச் செல்கிறது. தமிழீழ ஆதரவாளர்களால் முன்வைக்கப்படும் வாதம் அடிப்படையில் ஒரு மக்கள் உரிமை, தேசியம் மற்றும் தாயகம் குறித்த கோரிக்கையாக இருப்பதால், தமிழர்களின் கோரிக்கையை இலங்கைக்குள் உள்ள "சிறுபான்மையினர் உரிமைகள்" என்ற கேள்வியாகச் சுருக்கிவிடக் கூடாது. பொதுவான சரத்து 1-இன் கீழ் பொருத்தமான சட்டரீதியான விசாரணை என்பது, ஈழத் தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரிமையுள்ள ஒரு "மக்கள்" ஆகிறார்களா, அப்படியானால், அந்த உரிமையை அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு என்ன தேவைப்படுகிறது என்பதாகும். பொதுவான சரத்து 1, "அனைத்து மக்களின்" உரிமைகளைப் பற்றி வேண்டுமென்றே பேசுகிறது, மேலும் மனித உரிமைகள் குழு அந்த உரிமையைப் பிரிக்க முடியாததாகவும், மற்ற மனித உரிமைகளைத் திறம்பட அனுபவிப்பதற்கு அடிப்படையானதாகவும் வகைப்படுத்தியுள்ளது.



தமிழீழ ஆதரவாளர்களுக்கு, இந்த வேறுபாடு அடிப்படையானது, ஏனெனில் அவர்களின் அரசியல் கோரிக்கை என்பது இலங்கை அரசு முழுவதும் தமிழ் தனிநபர்கள் சமமான நடத்தையைப் பெற வேண்டும் என்பது மட்டுமல்ல. அது, ஈழத் தமிழர்கள் ஒரு தனித்துவமான மக்கள் என்றும், அவர்களின் தேசிய இருப்பு வரலாற்று ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் வடகிழக்குடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும், எனவே அவர்கள் தங்கள் தாயகத்தின் அரசியல் நிலையைத் தீர்மானிக்கும் திறனைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுமாகும். இது ஒரு மத்திய அரசிடம் இருந்து கலாச்சார இணக்கத்தைக் கோருவதிலிருந்து அடிப்படையில் வேறுபட்ட ஒரு முன்மொழிவாகும், ஏனெனில் இது கூட்டு அரசியல் அதிகாரத்தையே சார்ந்தது.

ஏன் இந்தக் கேள்வி இறுதியில் தமிழ் ஈழத்திற்கு இட்டுச் செல்கிறது இந்தக் கட்டமைப்பின் மூலம் ஐந்து கோரிக்கைகளும் புரிந்து கொள்ளப்பட்டவுடன், தமிழ் ஈழத்திற்கான தொடர்ச்சியான கோரிக்கையை ஒரு அரசியல் மற்றும் சட்டரீதியான வாதமாகப் புரிந்துகொள்வது எளிதாகிறது. அதன் ஆதரவாளர்களைப் பொறுத்தவரை, தமிழர்கள் கடுமையான அநீதிகளுக்கு ஆளாகியுள்ளனர், எனவே இழப்பீடாக ஒரு தனி அரசுக்கு அவர்கள் தகுதியானவர்கள் என்பது மட்டுமல்ல வாதம்; மாறாக, தடுப்புக்காவல், நிலம், நிர்வாகம், காவல், இராணுவ இருப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை தொடர்பான தொடர்ச்சியான சர்ச்சைகள், தமிழ் தாயகத்தின் மீதான அரசியல் அதிகாரம் இறுதியில் யாரிடம் உள்ளது என்பது குறித்த ஒரு ஆழமான கட்டமைப்புச் சிக்கலை வெளிப்படுத்துகின்றன என்பதே அது.

தமிழ் நிலத்தின் பாதுகாப்பு, அந்த நிலம் பாதுகாக்

தொடர்ச்சி: பக்கம் 15




மத்திய கிழக்கில் அமெரிக்க அதிபரின் சமாதானத் தூதராகச் செயற்படும் டொனால்ட் ட்ரம்பின் மருமகன் ஜாரெட் குஸ்னர் (Jared Kushner) இஸ்ரேலிய ஆயுதத் தொழிலில் பெரும் முதலீடுகளைக் கொண்டுள்ளார்.

குஸ்னரின் நிதி நிறுவனத்தை CNN செய்தி நிறுவனம் புலனாய்வு செய்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது, அதில் பில்லியன் கணக்கான டாலர் முதலீடுகள் அடங்கியுள்ளன என்பது தெரியவந்துள்ளது.

இஸ்ரேலின் போரின் விளைவாக இந்த முதலீடுகள் பலனளித்துள்ளன என்று அந்த ஆய்வு காட்டுகிறது. 45 வயதான குஸ்னர், தனது மாமனாரின் தூதராகவும் சமாதானத் தரகராகவும் நீண்ட காலமாக ஒரு சர்ச்சைக்குரிய பாத்திரத்தை வகித்து வருகிறார்.




**சுருக்கமான தரவுகள்:**

இஸ்ரேலிய ஆயுதத் தொழிலில் ஜாரெட் குஸ்னர் (Jared Kushner) பெரும் முதலீடுகளைக் கொண்டுள்ளார் என்று CNN செய்தி நிறுவனம் வெளிப்படுத்தி உள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதலின் விளைவாக இந்த முதலீடுகளின் மதிப்பு கணிசமாக அதிகரித்துள்ளது. தொழிலதிபர் மற்றும் சமாதானத் தூதர் என குஸ்னரின் இரட்டைப் பாத்திரம் விமர்சிக்கப்படுகிறது. காங்கிரஸில் குஸ்னரின் பங்கு குறித்து விசாரணை நடத்தப்படும் என்று ஜேமி ராஸ்கின் (Jamie Raskin) உறுதியளித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்த தனது முதல் பதவிக்காலத்தில், சவூதி அரேபியாவின் சக்திவாய்ந்த பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உட்பட மத்திய கிழக்கின் பல தலைவர்களுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தினார்.

ஜனவரி 21, 2021 அன்று, ட்ரம்ப் ஜனாதிபதி பதவியை ஜோ பைடனிடம் ஒப்படைத்த மறுநாள், குஸ்னர் மியாமியைத் தளமாகக் கொண்ட Affinity Partners என்ற முதலீட்டு நிறுவனத்தை நிறுவினார், அதன் ஒரே உரிமையாளர் அவரே.

**பில்லியன்கள்:**

சில மாதங்களுக்குப் பிறகு, முகமது பின் சல்மான் தலைமையிலான சவூதி அரேபியாவின் இறையாண்மை செல்வ நிதியம், அந்த நிறுவனத்தில் கிட்டத்தட்ட 20 பில்லியன் குரோனரை முதலீடு செய்தது.

ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தாரிலிருந்து புதிய பில்லியன்கள் தொடர்ந்து வந்தன, மேலும் குஸ்னரின் நிறுவனம், அபுதாபியில் உள்ள ரியல் எஸ்டேட் (real estate) நிறுவனங்களிலும் பெரும் முதலீடுகளைச் செய்தது.

2023-ல், Affinity இஸ்ரேலில் தனது பல முதலீடுகளில் முதல் முதலீட்டையும் செய்தது, மேலும் அடுத்த ஆண்டு அந்நிறுவனம் இஸ்ரேலிய முதலீட்டு நிறுவனமான Phoenix Financial நிறுவனத்தில் கிட்டத்தட்ட 5 சதவீதப் பங்குகளைப் பெற்றது.

ட்ரம்ப் தனது இரண்டாவது ஜனாதிபதி பதவிக் காலத்தைத் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பு, Affinity நிறுவனம் மற்றும் Phoenix நிறுவனத்தில் தனது பங்குகளை இரட்டிப்பாக்கியதோடு அந்த இஸ்ரேலிய நிறுவனத்தின் மிகப்பெரிய பங்குதாரராகவும் ஆனது. Phoenix நிறுவனத்தில் முதலீடு செய்வது என்பது இஸ்ரேலின் மீள்திறன் மீதான எனது நம்பிக்கையில் ஏற்பட்ட ஒரு முடிவாகும் என்று யூலை 2024-ல் பங்கு கொள்முதலுக்கு இஸ்ரேலிய அதிகாரிகள் ஒப்புதல் அளித்தபோது Bloomberg செய்தியாளருக்குக் கூறினார்.



**பெரும் ஈடுபாடு:**

Phoenix Financial இஸ்ரேலின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றாகும், மேலும் அந்நாட்டின் பல முக்கிய ஆயுத உற்பத்தியாளர்களில் பெரும் பங்கைக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இஸ்ரேலிய இராணுவத்திற்காக குண்டுகள் மற்றும் எறிகணைகள் உள்ளிட்டவற்றைத் தயாரிக்கும் மிகப்பெரிய ஆயுத உற்பத்தியாளரான எல்பிட் சிஸ்டம்ஸ் (Elbit Systems) நிறுவனத்தில் இந்நிறுவனம் மிகப்பெரிய பங்குதாரராக உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் காசா பகுதியில் குண்டுவீச்சைத் தொடங்கியதிலிருந்து எல்பிட்டின் (Elbit) பங்கு மதிப்பு வியக்கத்தக்க வகையில் 165 சதவீதம் உயர்ந்துள்ளது.



தாக்குதல் ட்ரோன்களுக்கான கேமராக்களைத் தயாரிக்கும் நெக்ஸ்ட் விஸன் (Next Vision) மற்றும் எறிகணை களுக்குத் தேவையான பாகங்களைத் தயாரிக்கும் Reshef Technologies ஆகிய நிறுவனங்களிலும் ஃபீனிக்ஸ் (Phoenix) பங்குகளைக் கொண்டுள்ளது. இந்த முதலீடுகள் ஃபீனிக்ஸ் (Phoenix) நிறுவனத்திற்கும், அதன் மிகப்பெரிய உரிமையாளரான குஸ்னரின் நிறுவனத்திற்கும் தங்கத்திற்கு நிகரான மதிப்பைக் கொடுத்துள்ளன.

**முறையான பதவி இல்லை:**

குஸ்னர் கடந்த ஆண்டு முதல் மீண்டும் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மத்திய கிழக்கு அமைதித் தூதராகப் பணியாற்றி வருகிறார், ஆனால் நிர்வாகத்தில் அவருக்கு முறையான பதவி எதுவும் இல்லை.

அவர் ஒரு தன்னார்வ மற்றும் அதிகாரப்பூர்வமற்ற தூதர் என்ற தகுதியை மட்டுமே கொண்டிருப்பதால்,

தமிழில் **ஸ்ரீவன் புஸ்பராஜா**

அமெரிக்கச் சட்டப்படி அவர் தனது தனிப்பட்ட நிதி விவரங்களையும், அஃபினிட்டி பார்ட்னர்ஸ் (Affinity Partners) மூலமான தனது சொத்துக்களையும் வெளியிட வேண்டிய கட்டாயம் இல்லை.

எனவே, சிஎன்என் அவர் ஆயுத நிறுவனங்களில் செய்துள்ள சில முதலீடுகளைக் கண்டறிய இஸ்ரேலியப் பதிவுகளை ஆய்வு செய்துள்ளது, ஆனால் இன்னும் பல முதலீடுகள் இருக்கலாம் என்றும் சந்தேகத்திற்கு இடமில்லையென்றும் கூறுகிறது.



மத்திய கிழக்கில் வணிக மற்றும் அரசியல் இலட்சியங்களுக்கு இடையிலான எல்லையை மங்கச் செய்வதற்காக, அஃபினிட்டி நிறுவனத்தையும் ஃபீனிக்ஸ் (Phoenix) நிறுவனத்தில் உள்ள தனது பங்கையும் பயன்படுத்துவது குறித்து குஸ்னர் வெளிப்படையாகப் பேசியுள்ளார்.

“ஒரு அரேபியரையும் ஒரு இஸ்ரேலியரையும் ஒரு மேசையில் அமர வைத்து ஒரு வணிக வாய்ப்பைப் பற்றிப் பேசும்போது, அவர்கள் மற்ற எல்லாவற்றையும் மறந்துவிடுகிறார்கள்,” என்று அவர் கடந்த ஆண்டு ஒரு நேர்காணலில் கூறியுள்ளார்.

**மாபெரும் காசா திட்டம்**

ஓராண்டுக்கு முன்பு இஸ்ரேலும் ஹமாசும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் குஸ்னர் முக்கியப் பங்காற்றினார், அதன் பின்னணியில், காசாவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரு மாபெரும் திட்டத்தை அவர் தொடங்கினார்.

டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தில் முன்வைக்கப்பட்ட “புதிய காசா”வுக்கான இந்தத் திட்டம், 180 வானுயரக் கட்டடங்கள், ஒரு விமான நிலையம் மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றைக் கட்டுவதற்கு அழைப்பு விடுக்கிறது. மேலும், குஸ்னரின் கூற்றுப்படி, இதில் பங்கேற்க விரும்புவோருக்கு இது “அற்புதமான முதலீட்டு வாய்ப்புகளை” வழங்கும் என்றும் கூறியுள்ளார்.

விமர்சனங்கள் ஏராளமாக உள்ளன, மேலும் தொழிலதிபர் மற்றும் ஜனாதிபதியின் அமைதித் தூதர் என குஸ்னரின் இரட்டைப் பாத்திரத்தை பலர் கேள்விக்கு உள்ளாக்குகின்றனர்.

**அறநெறிக்கு முரணான:**

ஒரு பேரழிவுகரமான போரின் மத்தியில் இலாபகரமான வணிகத்தையும் அபாயகரமான அரசியலையும் கலக்கும் ஒரு தனித்துவமான இரட்டைப் பாத்திரத்தை குஸ்னர் வகிக்கிறார் என்று CNN குறிப்பிடுகிறது.

காங்கிரஸில் உள்ள ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜேமி ராஸ்கின், குஸ்னரின் இரட்டைப் பாத்திரங்களை “முற்றிலும் பொருந்தாதவை மற்றும் அறநெறியற்றவை”

தொடர்ச்சி: பக்கம் 15




A.M.L லம்பேட்

2026 அக்டோபர் மாதத்தில் யேமனின் (Yemen) மேற்குக் கடற்கரைப் பகுதிகளிலும் பாப் அல்-மந்தெப் (Bab al-Mandeb) நீரிணையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இராணுவ மோதல்கள் தீவிரமடைந்துள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற யேமன் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் சவூதி அரேபியா தலைமையிலான கூட்டணிப் படைகள், ஹர்தி இயக்கத்திடமிருந்து முக்கியமான பகுதிகளை மீட்டுள்ளதாக அறிவித்துள்ளன. குறிப்பாக மற்றும் மோக்கா (Mocha) பகுதிகளைச் சுற்றியுள்ள முன்னேற்றங்கள் செங்கடல் கடல்வழிப் போக்குவரத்தின் பாதுகாப்பு குறித்த கவனத்தை அதிகரித்துள்ளன. எனினும் நிலப்பரப்பின் முழுமையான கட்டுப்பாடு குறித்த இரு தரப்பினரின் கூற்றுகளும் சுயாதீனமாக உறுதிப்படுத்தப்பட வேண்டியவை. (Reuters)



இதற்குப் பதிலளிக்கும் வகையில், ஹர்தி இயக்கம் (uouthi Movement), சவூதி அரேபியாவின் விமான நிலையங்கள், எரிசக்தி உள்கட்டமைப்புகள் மற்றும் இராணுவ நிலைகள் மீது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் (Missile and Drone Attacks) நடத்தியதாகக் கூறியுள்ளது. இந்தத் தாக்குதல்கள் சவூதி அரேபியாவின் தேசியப் பாதுகாப்புக்கு மட்டுமன்றி, பிராந்திய ஸ்திரத்தன்மைக்கும் (Regional Stability) அச்சுறுத்தலாக அமைகின்றன. இதனால், பல ஆண்டுகளாக நீடித்து வந்த யேமன் உள்நாட்டுப் போர் மீண்டும் ஒரு பரந்த பிராந்திய மோதலாக மாறும் அபாயம் உருவாகியுள்ளது.

இந்த மோதலின் முக்கியமான புவிசார் அரசியல் (Geopolitical) பரிமாணம் பாப் அல்-மந்தெப் நீரிணையாகும். செங்கடலையும் ஏடன் வளைகுடாவையும் இணைக்கும் இந்த நீரிணை, ஐரோப்பா மற்றும் ஆசியாவுக்கிடையிலான சர்வதேச வர்த்தகப் பாதையில் (International Trade Route) முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இப்பகுதியில் பாதுகாப்பு பாதிக்கப்படும்போது, கப்பல் போக்குவரத்து, எண்ணெய் விநியோகம், காப்பீட்டுச் செலவுகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் (Global Supply Chains) பாதிக்கப்படலாம். எனவே, யேமனில் நிலப்பரப்பைக் கைப்பற்றுவதற்கான போராட்டம் என்பது வெறும் உள்நாட்டு அதிகாரப் போட்டி மட்டுமல்ல சர்வதேச கடல்சார் பாதுகாப்பு (Maritime Security) மற்றும் உலகப் பொருளாதாரத்தின் நலன்களுடனும் தொடர்புடையது.



சவூதி அரேபியா, பாகிஸ்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட மக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் (Mecca Joint Defence Agreement), தற்போதைய மோதலில் புதிய மூலோபாய முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. 2026 அக்டோபர் தொடக்கத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தைத் தொடர்ந்து, சவூதி அரேபியாவின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காகக் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் இராணுவத் திறன்களை ஒருங்கிணைக்கவும் இந்த நாடுகள் ஒப்புக் கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (Al Jazeera)




இந்த ஒத்துழைப்பின் முக்கிய நோக்கம், ஒரு நாட்டின் மீது நடத்தப்படும் ஆயுதத் தாக்குதல் மற்ற உறுப்பு நாடுகளின் பாதுகாப்பையும் பாதிக்கும் என்ற தடுப்பு அணுகுமுறையை (Collective Deterrence) வலுப்படுத்துவதாகும். வான் பாதுகாப்பு (Air Defence), தொழில்நுட்ப உதவி (Technical Support), உளவுத்துறைத் தகவல் பகிர்வு (Intelligence Sharing) மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு சாத்தியமாக உள்ளது.

துருக்கியின் வெளியுறவு அமைச்சர் ஹகான் ஃபிடான், சவூதி அரேபியாவின் தற்காப்புத் தேவைகளுக்கு உதவுவது குறித்து துருக்கி பரிசீலித்து வருவதாகக் கூறியுள்ளார். அதேவேளை, துருக்கி யேமனுக்குள் தாக்குதல் நடத்துவதற்காகத் தனது படைகளை அனுப்பும் திட்டம் இல்லை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதனால், தற்போதைய ஒப்பந்தத்தை நேரடியாகத் தாக்குதல் நடத்து வதற்கான கூட்டணியாகக் கருதுவதற்குப் பதிலாக, தற்காப்பு மற்றும் பிராந்தியத் தடுப்பு ஒத்துழைப்பாகப் புரிந்துகொள்வது பொருத்தமானது. (Reuters)



சவூதி அரேபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நீண்டகால பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகள் (Security and Military Relations) உள்ளன. தற்போதைய நெருக்கடியிலும், சவூதி அரேபியா தன்னைத் தற்காத்துக் கொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. அமெரிக்காவின் உளவுத்துறை ஆதரவு குறித்தும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (Al Jazeera)

இருப்பினும், மக்கா பாதுகாப்பு ஒப்பந்தம் அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட திட்டம் என்றும், அது ஈரான் மீது நேரடித் தாக்குதல் நடத்துவதற்கான முன்னோட்டம் என்றும் உறுதியாகக் கூறுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. இந்த ஒப்பந்தம் சவூதி அரேபியாவின் பாதுகாப்புத் தேவைகள், ஹர்தி தாக்குதல்களுக்கான பதில் மற்றும் பிராந்திய சக்திகளுக்கிடையிலான மூலோபாய ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகியிருக்கலாம்.

அதேவேளை, அமெரிக்கா-ஈரான் மோதல் (US-Iran Conflict) மற்றும் செங்கடல் பாதுகாப்பு ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக மாறியுள்ளன. எனவே, யேமனில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் ஈரானின் பிராந்தியச் செல்வாக்கைக் குறைக்கும் விளைவைக் கொண்டிருக்கலாம். ஆனால் அதுவே ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் இருப்பதை நிரூபிக்காது.

ஹர்திகள் தங்களை அன்சார் அல்லாஹ் (Ansar Allah) என அழைக்கும் ஆயுத அரசியல் இயக்கமாகும். அவர்கள் யேமனின் சைதி ஷியா (Zaydi Shia) மத மரபுடன் தொடர்புடையவர்கள். ஈரான் இந்த இயக்கத்துக்கு அரசி யல் ஆதரவும் இராணுவத் திறன்களை மேம்படுத்தும் உதவியும் வழங்குவதாகப் பல சர்வதேச அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், ஹர்திகளை ஈரானின் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் பிரதிநிதி அமைப்பாக (Proxy Force) மட்டுமே சித்தரிப்பது அரசியல் யதார்த்தத்தை எளிமைப்படுத்துவதாகும். ஹர்திகளுக்கு யேமனுக்குள் தனித்த உள்ர் அதிகாரக் கட்டமைப்பு, அரசியல் நோக்கங்கள் மற்றும் பிராந்தியக் கணக்கீடுகள் உள்ளன. அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ள யேமனின் பகுதிகளையும் முழு யேமன் நாட்டையும் ஒன்றாகக் கருத முடியாது. யேமன் மக்களின் மத அடையாளங்களும் அரசியல் நிலைப்பாடுகளும் ஒரே மாதிரியானவை அல்ல.



எனவே, சவூதி தலைமையிலான நடவடிக்கைகள் ஹர்திகளின் நிலப்பரப்புக் கட்டுப்பாட்டைக் குறைப்பதோடு, ஈரானின் பிராந்தியச் செல்வாக்கையும் பலவீனப்படுத்தக்கூடும். இதனை ஈரானைத் தனிமைப்படுத்தும் மூலோபாயத்தின் (Strategic Containment) ஒரு பகுதியாகப் பார்க்க முடியும். ஆனால் ஹர்திகளின் இராணுவத் திறனைக் குறைப்பதும் ஈரானுக்கு எதிராக நேரடிப் போர் தொடுப்பதும் இரு வேறுபட்ட மூலோபாய நோக்கங்களாகும்.

யேமனில் நடைபெறும் தற்போதைய மோதல்கள், மத்திய கிழக்கின் அதிகாரப் போட்டி (Regional Power Competition), கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஈரானின் பிராந்தியச் செல்வாக்கு ஆகியவற்றுடன் ஆழமாக இணைந்துள்ளன. மக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் சவூதி அரேபியாவுக்கு பிராந்திய ஆதரவை வழங்குவதுடன், பாகிஸ்தான் மற்றும் துருக்கியின் பாதுகாப்புப் பங்களிப்புகளையும் அதிகரிக்கக்கூடும்.

இருப்பினும், இந்த ஒத்துழைப்பு ஈரானுக்கு எதிரான நேரடிப் போர் திட்டம் என்று முடிவு செய்வதற்கு முன், தெளிவான ஆதாரங்களும் நாடுகளின் அதிகாரப்பூர்வக் கொள்கைகளும் ஆராயப்பட வேண்டும். நீண்டகாலத் தீர்வுக்கு இராணுவ நடவடிக்கைகள் மட்டுமன்றி, அரசியல் பேச்சுவார்த்தை (Political Negotiations), பிராந்தியத் தர்தரகம் (Regional Diplomacy), பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் யேமனின் அரசியல் எதிர்காலம் குறித்த உள்ளடக்கிய தீர்வு ஆகியவை அவசியம்.

• • •

## தமிழ்ப் பெண்மையின் ... தொடர்ச்சி...

சட்டரீதியாகப் பயன்படுத்துவது குறித்து விவாதங்கள் இருந்தாலும், கூட்டு அரசியல் செயல்பாட்டு ஆற்றலை (collective political agency) இது அங்கீகரிப்பது, தேசிய அரசியல் வாழ்வில் பெண்களின் பங்கேற்பைக் கருத்தில் கொள்வதற்கான ஒரு முக்கிய கட்டமைப்பை வழங்குகிறது.

பெண்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரத்தை மறுக்கும் உள் கட்டமைப்புகளை ஏற்றுக்கொண்டு, அதே வேளையில் கூட்டுச் சுதந்திரத்திற்காக ஒரு அரசியல் இயக்கம் நம்பகத்தன்மையுடன் வாதிட முடியாது. எனவே, தமிழ் பெண்களின் விடுதலையானது, தேசிய சுயநிர்ணய உரிமைக்குப் பிறகு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு இரண்டாம் நிலை நோக்கமாகக் கருதப்படக்கூடாது; மாறாக, தமிழ் தேசம் நிறுவ விரும்பும் அரசியல் சமூகத்தின் இன்றியமையாத அங்கமாகவே அது கருதப்பட வேண்டும்.

### நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும் பெண்கள்

தமிழ் பெண்களின் அரசியல் பங்கேற்பின் மரபு 2009-இல் மறைந்துவிடவில்லை; தமிழ் தாயகம் முழுவதும் பெண்கள் தொடர்ந்து முன்னெடுக்கும் போராட்டங்கள், நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் அங்கீகாரம் ஆகியவற்றைக் கோருவதில் அவர்களின் பங்கு இன்றியமையாதது என்பதை நிரூபிக்கின்றன. வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்களும் உறவினர்களுமே மிகவும் சக்திவாய்ந்த எடுத்துக்காட்டுகளில் அடங்குவர். இவர்களின் நீண்டகாலப் போராட்டங்கள், வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுவதன் நீடித்த விளைவுகளையும், காணாமல் போன குடும்ப உறுப்பினர்களின் கதி குறித்து நம்பகமான பதில்களை வழங்கத் தவறிய இலங்கை அரசாங்கங்களின் தோல்வியையும் அம்பலப்படுத்தியுள்ளன.

இந்தப் பெண்கள், மோதலின் வெவ்வேறு கால கட்டங்களில் காணாமல் போன குழந்தைகள், கணவர்கள் மற்றும் உறவினர்கள் பற்றிய தகவல்களைக் கோரி பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். இதில், இலங்கை பாதுகாப்புப் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவோ அல்லது அவர்களால் தடுத்து வைக்கப்பட்டதாகவோ கூறப்படும் நபர்களும் அடங்குவர். கண்காணிப்பு, அச்சுறுத்தல், பொருளாதார நெருக்கடி மற்றும் தாங்கள் தேடிய பதில்களைப் பெறாத தாய்மார்களின் மரணங்கள் ஆகியவற்றையும் மீறி, இவர்களின் தொடர்ச்சியான வாதம் நீடித்து வருகிறது.

இவர்களின் கோரிக்கைகள், பயனுள்ள தீர்வுக்கான உரிமை, உண்மைக்கான உரிமை மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்களை விசாரிக்க வேண்டிய அரசுகளின் கடமை உள்ளிட்ட சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் வேரூன்றியுள்ளன.

இந்தப் பெண்களின் அசாதாரணமான விடாமுயற்சியானது, விரிவான பொறுப்புக்கூறலை வழங்காமல், கடுமையான மனித உரிமைக் கவலைகளை மீண்டும் மீண்டும் ஒப்புக்கொள்ளும் சர்வதேச செயல்முறைகளின் வரம்புகளை அம்பலப்படுத்துகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, கவலை அறிக்கைகளும் அவ்வப்போது வழங்கப்படும் தீர்வுகளும், நம்பகமான விசாரணைகள், சான்றுகளுக்கான அணுகல் மற்றும் அர்த்தமுள்ள தீர்வுகள் ஆகியவற்றுக்கு மாற்றாக அமைய முடியாது.

எனவே, தமிழ் தாயகம் முழுவதும் தொடர்ந்து போராடும் பெண்கள், அனுதாபத்திற்குரிய தனிநபர்கள் மட்டுமல்ல; மாறாக, கடுமையான மனித உரிமை மீறல்களின் விளைவுகளைக் கையாள்வதில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் தோல்விக்கு சவால் விடும் அரசியல் சக்திகளாகவும் அவர்கள் திகழ்கின்றனர்.

தொடரும்.......

## அரசியல் ஆய்வாளர் ... தொடர்ச்சி...

2024, ஜனாதிபதித்தேர்தலில் வடகிழக்கில் இருந்து ஒரு தமிழ் பொதுவேட்பாளரை களம் இறக்கி ஈழத்தமிழர் கொள்கை நிலையையும், உறுதிப்பாட்டையும் தேர்தல் மூலம் வெளிக்காட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக சமூக அமைப்புக்களுக்கு தெளிவு படுத்தியதுடன் அந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாத்தில் முழுமையாக தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனின் பிரசாரத்தில் தன்னை ஈடுபடுத்தி வட மாகாணம் முழுவதும் பிரசாரத்தை முன்னடுத்தார்.

ஆய்வாளர் ஜோதிலிங்கம் ஈழத்து தமிழ் அரசியல் சூழலில் மிக முக்கியமான ஒரு மூத்த அரசியல் ஆய்வாளர், கல்வியாளர் மற்றும் சட்டத்தரணி ஆவார். இவர் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் (Center for Social Science Research) தலைவராகப் பணியாற்றினார். [1, 2, 3] அரசியல் தளத்தில் அவரது மிக முக்கியமான திறமைகள் மற்றும் பங்களிப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

ஆழமான அரசியல் பகுப்பாய்வுத் திறன் ஈழம் மற்றும் இலங்கை அரசியல் தமிழ் தேசிய அரசியல், இலங்கை அரசியல் வரலாற்றுக் கட்டமைப்பு மற்றும் தமிழ் தேசியத்தின் போக்குகள் குறித்து மிகத் துல்லியமான, ஆழமான பகுப்பாய்வுகளைத் தொடர்ச்சியாக வழங்கி வந்தார்.

உலகளாவிய அரசியல் மாற்றங்கள் மற்றும் புவிசார் அரசியல் எவ்வாறு ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பாதிக்கின்றன என்பதை சர்வதேசப் பார்வையில் பகுத்தாய்வதில் வல்லவராக இருந்தார்.

கொள்கை ரீதியான எழுத்தாற்றல் நூல்கள் மற்றும் கட்டு ரைகள் அரசியல் சிந்தனை நூல் வரிசை' உள்ளிட்ட தமிழ் தேசிய அரசியல், புதிய அரசியல் கலாச்சாரம், மற்றும் மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சி சார்ந்த பல முக்கியமான நூல்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

சிக்கலான விடயங்களை எளிமைப்படுத்துதல் இனப் படுகொலை, சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ் இறையாண்மை போன்ற சிக்கலான அரசியல் மற்றும் சட்ட விவகாரங்களை மக்கள் எளிதில் விளங்கும் வண்ணம் கட்டுரைகளாக வடித்தார்.

மக்கள் விழிப்புணர்வும் சமூகப் பணியும் அரசியல் விழிப்புணர்வு பல் துறை ஆய்வாளராக இருந்த வர், வெறுமனே ஆய்வுகளுடன் நின்றுவிடாமல், மக்களிடையே அரசியல் விழிப் புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் செயற்படத் தூண்டுவதைத் தனது முதன்மைப் பணியாகக் கொண்டிருந்தார்.

தமிழ் தேசியக் கோட்பாடுகள், சமகால அரசியல் சவால்கள் குறித்து இளைய தலைமுறையினருக்கும் அரசியல் ஆர்வலர்களுக்கும் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலம் வழிகாட்டியாகத் திகழ்ந்தார். தியாகி திலீபனின் சிலை யாழ்ப் பாணத்தில் பொலிசார் அகற்றிய வேளையில் அதனை எதிர்த்து குரல் கொடுத்தது மட்டமன்றி யாழில் அதற்கு எதிராக இடம்பெற்ற மக்கள் எதிர்ப்பு போராட்டங்களிலும் கலந்துகொண்டார் கடந்த 2026, செப்டம்பர், 30, ல் அவர் கலந்துகொண்ட இறுதிப்போராட்டமாக இதனை பார்க்கலாம்.

ஈழத்தமிழர்களின் விடிவுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவந்த சமூக செயல்பாட்டாளர் அன்னாரின் இழப்பு ஈழத் தமிழர்களுக்கு பெரும் இழப்பாகும்.!

• • •

## மயிலத்தமடு, மாதவனைப் ... தொடர்ச்சி...

பரம்பரை நிலங்கள் சிறுகச் சிறுகக் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய கால்நடை வளர்ப்புத் துறையையும், வாழ்வாதாரத்தையும் முற்றாக அழித்து, அவர்களைச் சொந்த மண்ணில் இருந்தே வெளியேற்றும் இந்த மறைமுக நடவடிக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அரசாங்கமும், மக்கள் பிரதிநிதிகளும், மனித உரிமை அமைப்புகளும் இதில் உடனடியாகத் தலையிட்டு, மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரையைப் பாதுகாக்க வும், பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு உரிய நீதி யையும் பாதுகாப்பையும் வழங்கவும் முன்வர வேண்டும். தவறும்பட்சத்தில், கிழக்கின் பாரம்பரிய அடையாளமும் தமிழ் மக்களின் வாழ்வாதாரமும் முற்றாகச் சீரழிக்கப்படுவதைத் தடுக்க முடியாமல் போய்விடும்.இதற்கான அவசர கட்ட மைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு குறித்த காணியை மீட்பதற் கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

## முதல் பெண் போராளி... தொடர்ச்சி...

படையினரிடம் ஒப்படைத்துவிட்டு அல்லது கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இன்றும் நீதிக்காகப் போராடி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக வடகிழக்கின் பல்வேறு மாவட்டங்களில் வீதிகளில் இறங்கித் தொடர் போராட்டங் களை, சர்வதேச நீதி கோரி போராட்டங்களை நடத்திவரும் இப்பெண்கள், அரச தரப்பிலிருந்து அச்சுறுத்தல்களையும் ஏமாற்றங்களையும் மட்டுமே எதிர்கொண்டு வருகின்றனர். சர்வதேச நீதிகூட இல்லாத நிலைமையே தொடர்கிறது.

வடகிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சி களால் மக்களை அணிதிரட்டி கவன ஈர்ப்புப் போராட்டங் களைச் சுயமாகச் செய்ய முடியாத தமிழ்த் தேசியக் கட்சிகளின் வழக்கநிலை அரசியல் தொடரும் போது, சகல போராட்டங்களிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தில் உள்ள தாய்மார்களே 90 வீதம் வடகிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் கலந்து கொள்வதைக் காணலாம்.

அந்தத் தாய்மார்களே அனைத்து போராட்டம், பொது நிகழ்வுகளில் கலந்துகொள்வதையும், ஏனைய பொதுவான தமிழ் மக்கள் பங்காளிகளாக வராமல் விலகிச் செல்வதும் தற்போது வடகிழக்கில் காணமுடிகிறது.

எனவே, தாயகத்தில் வாழும் பெண்கள் எதிர்நோக் கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற் கான ஒன்றிணைந்த திட்டங்களை ஒற்றுமையாக முன்னெடுப் பதற்கு வேறுபாடுகளைக் களைந்து ஒன்றிணைந்து ஒரே குரலில் ஈழத்தமிழ் பெண்கள் இணைய வேண்டும் என்பதை இன்றைய 2026, அக்டோபர் 10 மாலதி என்ற வீரப்பெண்ணின் 39ஆவது ஆண்டு நினைவில் அனைவரும் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும்.

• • •

## இஸ்ரேலிய ஆயுதத் ... தொடர்ச்சி...

என்று கூறுகிறார், மேலும் பிரதிநிதிகள் சபையின் நீதித் துறைக் குழு ஒரு விசாரணையைத் தொடங்கும் என்று உறுதியளித்துள்ளார். ஆனால் குஸ்னரும் வெள்ளை மாளிகையும் இந்த விமர்சனத்தை நிராகரிக்கின்றனர்.

"மக்கள் நலன் முரண்பாடுகள் என்று அழைப்பதை, நான் அனுபவம் மற்றும் நம்பிக்கையான உறவுகள் என்று அழைக்கிறேன்," என்று அவர் ஒரானடுக்கு முன்பு ஊடீளு செய்திக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

"ஜாரெட் குஸ்னரின் தனிப்பட்ட வணிக நடவடிக்கைகளுக்கும், அவர் ஜனாதிபதியின் வேண்டு கோளின் பேரில் தன்னார்வ அடிப்படையில் மேற்கொள்ளும் தூதரகப் பணிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை," என்று ட்ரம்பின் செய்தித் தொடர்பாளர் அன்னா கெல்லி (Anna Kelly) CNN செய்தி நிறுவனத்திற்குக் கூறியுள்ளார்.

**முக்கிய குறிப்புகள்:**

அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மருமகன் பல இஸ்ரேலிய ஆயுத உற்பத்தியாளர்களில் பெரும் முதலீடுக ளைக் கொண்டுள்ளார்.

காசா பகுதி, மேற்குக் கரை, லெபனான், சிரியா மற்றும் ஈரான் ஆகிய பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய போர்களின் விளைவாக, கடந்த மூன்று ஆண்டுகளில் இஸ்ரேலிய ஆயுத உற்பத்தியாளர்கள் பெரும் தொகையை ஈட்டியுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இஸ்ரேல், காசா பகுதியின் பெரும் பகுதிகளை இடிபாடுகளாக மாற்றியுள்ளது, மேலும் இஸ்ரேலிய ஆயுதத் துறைக்கு, இந்தப் போர் பொன் போன்ற மதிப்புடையதாக இருந்துள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் முதல் அதிபர் பதவிக்காலம் முடிவடைந்த மறுநாளே ஜாரெட் குஸ்னர் தனது சொந்த முதலீட்டு நிறுவனத்தை உருவாக்கினார்.

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் அனைத்தும் ஜாரெட் குஸ்னரின் முழு உரிமையுடைய முதலீட்டு நிறுவனத்திற்கு பில்லியன் கணக்கில் பங்களித்துள்ளன.

**நன்றி:**

**வெர்டென்ஸ் கேங் (VG)**
நோர்வேஜிய தேசியப் பத்திரிகை.

## தியாக தீபம் லெப்டினன்ட் ... தொடர்ச்சி...

கப்படுமா என்பதை மற்றொரு அரசாங்கம் தீர்மானிப்பதைப் பொறுத்திருந்தால், இராணுவமயமற்ற நிலையின் அளவு, என்ன பாதுகாப்பு இருப்பு அவசியம் என்பதை மற்றொரு அரசாங்கம் தீர்மானிப்பதைப் பொறுத்திருந்தால், தமிழ் அரசியல் நிறுவனங்களின் அதிகாரங்கள் மற்றொரு இறை யாண்மை அதிகாரம் அவற்றை ஒப்படைக்கத் தேர்ந்தெடுக் கும் அளவிற்கு மட்டுமே இருந்தால், மற்றும் காவல், வளங்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான அடிப்படைக் கேள்விகள் இறுதியில் மத்திய நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தால், தமிழ் மக்கள் தங்களின் முழுமையான அரசியல் அர்த்தத்தில் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, மற்றொரு அதிகாரத்தின் அரசியல் விருப்புரிமையைச் சார்ந்தே இருக்கிறார்கள் என்று தமிழ் ஈழத்தின் ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.

இங்குதான் பொதுவான சரத்து 1-இன் வாசகம் குறிப்பாக சக்தி வாய்ந்ததாகிறது, ஏனெனில் அந்த உரிமை என்பது அரசியலில் பங்கேற்பது மட்டுமல்ல, அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாகத் தீர்மானிப்பதும் ஆகும். எனவே, தமிழ் ஈழத்தின் ஆதரவாளர்களுக்கு எழும் அடிப்படைக் கேள்வி என்னவென்றால், சர்வதேச சமூகம் ஒவ்வொரு விவாதத்தையும், அவர்களின் அரசியல் எதிர்காலம் நிரந்தர மாக தற்போதுள்ள இலங்கை அரசுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று முன்கூட்டியே அறிவித்துத் தொடங்கினால், ஈழ தமிழர்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாகத் தீர்மானிப்பதாக உண்மையாகவே விவரிக்கப்பட முடியுமா என்பதுதான்.

தொடரும்.......

## மலையக மக்களின் ... தொடர்ச்சி...

அடையாளத்தையும் செதுக்கிய முதன்மைப் பங்காளிகள் ஆவர். லவர்ஸ்லீப் தோட்டத்தில் நடந்த சம்பவம் தனிநபர் சார்ந்த ஒரு கசப்பான அனுபவமாக கடந்துபோக முடியாது. அது மலையகச் சமூகம் சந்தித்து வரும் நீண்டகால மனித உரிமை மற்றும் காணி உரிமை சார்ந்த அவலங்களின் வெளிப்பாடாகும். 'கள்ளத்தோணி' என்ற அவதூறுச் சொல்லாடலுக்குப் பின்னால் இருக்கும் வரலாற்றுத் திரிபுகளைக் களைவதும், அம்மக்களுக்கான நில உரிமை, குடியுரிமை மற்றும் மனித கண்ணியத்தை உறுதி செய்வதும் நாட்டின் கட்டாயப் பொறுப்பாகும். அதிகார வர்க்கத்தின் இத்தகைய அலட்சியப்போக்குகளுக்கு எதிராகச் சுயாதீன மான விசாரணைகள் நடத்தப்பட்டு நியாயம் வழங்கப் படுவதோடு, மலையக மக்களின் சுயமரியாதையும் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதே ஒரு சமத்துவ சமூகத்திற் கான உண்மையான அடையாளமாக அமையும்.

• • •

## வன்னி விவசாயிகளுக்குப் ... தொடர்ச்சி...

தீர்வுகளைக் காணும் நோக்கில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரோகிணி குமாரி விஜேரத்ன அவர்களால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை காலப்பொருத்தமானது.

ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பல்வேறு தொடர்ச்சியான சவால்களால் எங்கள் வன்னி மாவட்டத்து விவசாயிகள் சொல்லொணாத் துயரங்களை இன்றளவும் அனுபவிக்கின்றனர். அவர்களின் சார்பாளனாக, அவர்கள் எதிர்கொள்ளும் வலிகளைப் பதிவுசெய்யவேண்டியதும் அவற்றை இழிவளவாக்க இயல்தகு வழிகளில் போராட வேண்டியதும் எம் கடனாகிறது.

விதை நெல்லை விதைப்பது தொடக்கம் விற்பது வரை ஒவ்வொரு கட்டமும் இத்தீவில் உள்ள விவசாயிக்கு சவாலான கட்டம் தான். அதுவும் வடகிழக்கைச் சார்பாக்கும் விவசாயி என்றால், அவருக்கு சொந்த நிலத்தில் விதைப்ப தென்பதே பெருஞ்சவால்!

வயல் நிலத்தை துப்புரவாக்கத் தடை, வயல் நிலத்தை உழுவதற்குத் தடை, வயல் நிலத்துக்கு நீர் பாய்ச்சத் தடை, வாய்க்கால் வெட்டத்தடை என ஒவ்வொரு கட்டத்திலும் வனவளத்திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என அரச இயந்திரங்களின் தடைகளுக்கும் வழக்குகளுக்கும் உட்பட்டு கடன்பட்டு வழக்காடி பிணை வாங்கி அல் லல்படுகின்ற அவல நிலையைத் தொடரச் செய்வ தில் இன்றளவும் இவ்வரசாங்கம் கூட இதற்கு விதி விலக்கில்லை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத்திணைக் களத்தால் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களின் காணி களை விடுவிப்பதன் பொருட்டு தொடர் கூட்டங்கள் நடைபெற்றன.

அதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட காணிக் கையாள்கைக் குழுவின் பரிந்துரைகளை ஆராயும் அமைச்சுகளுக்கு இடையிலான குழுக்கூட்டம் 2024.02.28 அன்று நடைபெற்று குறித்த பரிந்துரைகள் அக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க அவர்களால் வன சீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 2024.06.06ஆம் திகதியில் இருந்து களவிஜயம் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப் பட்டு பின்னர் ஒருங்கிணைந்த களவிஜயங்கள் மேற் கொள்ளப்பட்டு தொடர் கூட்டங்கள் நேரடியாகவும் சூம் செயலி ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டு காணி ஆவணங்கள் ஏதுமின்றி நேரடியாக ஒரு தொகுதி காணிகளை விடுவிப்பதாகவும் மேலதிக ஆவணங்களு டன் அடுத்த ஒரு தொகுதி காணிகளை விடுவிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் 10102.06 ஏக்கரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் 14481.90 ஏக்கரும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 19246.54 ஏக்கரும் துணுக்காய் பிரதேச செயலகத்தில் 10209 ஏக்கரும், மாந்தை கிழக்கில் 18822.04 ஏக்கருமாக மொத்தம் 72862.26 ஏக்கர் காணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவனத்திணைக்களத்திடம் இருந்து விடுவிக்கப்படவேண்டிய காணிகளாக கடந்த காலத்தில் அடையாளப்படுத்தப்பட்டன.

அவற்றுள் கடந்த கால போரினால் ஆவணங்களை மக்கள் தொலைத்த நிலையில், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் 7447.66 ஏக்கர், புதுக்குடியிருப்பில் 12679.29 ஏக்கர், ஒட்டுசுட்டானில் 17954.77 ஏக்கர் துணுக்காயில் 987.93 ஏக்கர், மாந்தை கிழக்கில் 3042.78 ஏக்கர் மணலாற்றில் 1055.83 ஏக்கர் நிலமாக முல்லைத்தீவில் மொத்தம் 43234.98 ஏக்கர் நிலம் காணி ஆவணங்கள் ஏதுமின்றி விடுவிக்கப்படவேண்டும் (d r)என ஒருங்கிணைந்த குழுவின் கள ஆய்வின் பின்னர் தீர்மானிக்கப்பட்டன.

அத்தோடு நீர்ப்பாசனத்திணைக்களத்தின் 2407.92 ஏக்கர் வயற்காணிகளும் கமநல அபிவிருத்தித் திணைக் களத்தின் 2703.63 ஏக்கருமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 5111.55 ஏக்கர் வயற்காணிகளும் விடுவிக்கப்பட வேண்டிய தாகவும் காணப்படுகின்றன.

இவ்வாறாக வனவளத்திணைக்களத்தில் கட்டுப் பாட்டில் இருந்து முல்லைத்தீவில் மட்டும் 72862.26 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண்டியதாக இருக்க, இப்போது வனவளத்திணைக்களத்தினால் தங்கள் ஆளுகைக்குள் புதிதாக வனப்பகுதியாக உள்வாங்கு வதற்கு முல்லைத் தீவு மாவட்டத்தில் மேலும் 25854.23 ஏக்கர் நிலம் கோரப் பட்டுள்ளது. இவ்வாறு

காடுகளுக்காக மேலதிகமாகக் கோரும் காணி களில், விசுவமடு நகர்ப்பகுதி உள்ளிட்ட மக்கள் வாழ் விடங்களும் அடங்குகிறது. இலங்கைக்குத் தேவை யான பெரும்பகுதி காட்டுத்தேவைக்காக வன்னி மக்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதார நிலங்களையுமா மேலும் மேலும் கையகப்படுத்துவது? அரச திணைக்களங்களே முன்னின்று இவ்வாறு முனைவது எவ்வகையான நீதி!

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக, காணி ஆவணங்கள் ஏதுமின்றி விடுவிக்கத் தீர் மானிக்கப்பட்ட 43234.98 ஏக்கர் அளவிலான மக்களின் வாழ்விட வாழ்வாதார நிலங்கள் குறிப்பாக முல்லைத்தீவு மக்களின் 5111.55 ஏக்கர் விவசாய நிலங்களை உடன் விடுவிக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## மூன்று மாதங்களில் ... தொடர்ச்சி...

தெரிவித்துள்ளது.

சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO), அக்டோபர் 6-ஆம் தேதி நிலவரப்படி, ஹார்முஸ் நீரிணை மற்றும் பரந்த மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வணிகக் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட 93 தாக்குதல்களை உறுதிப்படுத்தியுள்ளது.

மேற்கு ஆசியா மற்றும் கருங்கடல் பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களில் நடந்த மோதல் தொடர்பான 57 கடல்சார் சம்பவங்களில் 15 இந்திய மாலுமிகள் உயிரிழந்தனர் மற்றும் இருவர் காணாமல் போயினர் என்று இந்தியாவின் கடல்சார் ஒழுங்குமுறை ஆணையம் ஆகஸ்ட் மாதம் தெரிவித்திருந்தது.

2026-ஆம் ஆண்டிற்கான BIMCO-ICS மாலுமி பணியாளர் ஆற்றல் அறிக்கையின்படி, 3,11,936 கடல்சார் நிபுணர்களுடன் (உலகளாவிய பணியாளர்களில் 12.16%) மாலுமிகளை வழங்கும் உலகின் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

செப்டம்பர் மாத இறுதியில், பாரசீக வளைகுடாவில் இயங்கும் வணிகக் கப்பல்களில் 4,500-க்கும் மேற்பட்ட இந்திய மாலுமிகள் பணியில் இருந்தனர்.

## இரகசியங்களை அம்பல ... தொடர்ச்சி...

இருப்பினும்,2010-ல் வெளியிடப்பட்ட முக்கியத்தகவல்களே விக்கிலீக்ஸை ஒரு உலகளாவிய நிகழ்வாக மாற்றின. வாஷிங்டன் தலைமையிலான ஆப்கானிஸ்தான் போர் தொடர்பான 91,000-க்கும் மேற்பட்ட ஆவணங்களையும், ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பு தொடர்பான சுமார் 391,000 அறிக்கைகளையும் வெளியிட்டது.

2012-ல், அசாஞ்ச் RT தொலைக்காட்சியில் ‘தி வேர்ல்ட் டுமாரோ’ என்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். பின்னர் கைவிடப்பட்ட ஒரு பாலியல் வன்கொடுமை விசாரணை தொடர்பாக, ஸ்வீடனுக்கு நாடு கடத்தப்படுவதற்கு எதிரான சட்டப் போராட்டத்தில் தோல்வியடைந்த பிறகு, அசாஞ்ச் லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். அவர் பிணை ஜாமீனை மீறித் தப்பிச் சென்றார், ஈக்வடாரால் அவருக்குப் புகலிடம் வழங்கப்பட்டது, மேலும் அவர் கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் தூதரகத்தில் தங்கியிருந்தார்.

அசாஞ்சை நாடு கடத்தி வழக்குத் தொடர அமெரிக்கா திட்டமிட்டிருப்பது பகிரங்கமானது. 2019-ல், ஈக்வடார் அசாஞ்சின் புகலிடத்தை ரத்து செய்தது, மேலும் அவர் பிரிட்டிஷ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, உயர் பாதுகாப்பு கொண்ட பெல்மார்ஷ் சிறைக்கு அனுப் பப்பட்டார். ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்த பிறகு, அசாஞ்ச் அமெரிக்காவுடன் ஒரு குற்ற ஒப்புதல் ஒப்பந்தத்தை ஏற்க ஒப்புக்கொண்டார். அதன்படி, அவர் ஏற்கனவே சிறையில் கழித்த காலத்திற்கு தண்டனை விதிக்கப்பட்டு அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பினார்.

## ஈரான் போரில் 81 ... தொடர்ச்சி...

மேலே ஒரு AH-64 Apache சுட்டு வீழ்த்தப்பட்டது, மீட்பு நடவடிக்கைகளின் போது நான்கு AH-6 Little Bird ஹெலிகாப்டர்கள் இழக்கப்பட்டன, மேலும் செப்டம்பர் மாத மத்தியில் அரபிக்கடலுக்கு மேலே ஒரு MH-60 Sea Hawk விபத்துக்குள்ளானது. ஈரானுடனான மோதலின் போது அமெரிக்காவின் MQ-9 ரீப்பர் (Reaper) ட்ரோன் படைப்பிரிவு அதிகபட்ச இழப்பைச் சந்தித்ததாகவும், குறைந்தது 45 ட்ரோன்கள் இதில் இழக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## ஜெஃப்ரி எப்ஸ்டீனின் ... தொடர்ச்சி...

நிறுவனத்திற்குத் தெரிந்த பிறகு, தனது தகவல்களை முறையாக விசாரிக்கவும் தன்னைப் பாதுகாக்கவும் எஃப்சிஏ தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார். அதைத் தொடர்ந்து, தகவலாளிகளுக்கான பாதுகாப்புகளுக்கு அவர் தகுதியற்றவர் என்று தவறாக அறிவுறுத்தியதை அந்த ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரியது.

அவரது குற்றச்சாட்டுகள் மற்ற இடங்களிலும் நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தன. சரக்கு எதிர்கால வர்த்தக ஆணையம் மற்றும் பத்திரங்கள் மற்றும் பரிவர்த் தனை ஆணையம் உள்ளிட்ட அமெரிக்க ஒழுங்குமுறை ஆணையங்கள், BGC தொடர்பான அமலாக்க வழக்கு களைத் தொடர்ந்தன, அதே நேரத்தில் பிரிட்டனின் வரி ஆணையம் அந்த நிறுவனத்திற்கு அபராதம் விதித்தது. ஆண்ட்ரீஸ், அமெரிக்க அதிகாரிகளிடமிருந்து $420,000 மதிப்புள்ள தகவல் அம்பலப்படுத்துபவர் விருதைப் பெற்றார், இருப்பினும் தனது சட்ட, மருத்துவ மற்றும் பிற செலவுகள் அந்தத் தொகையை விட மிக அதிகமாக இருந்ததாக அவர் கூறினார்.

## மூத்த அரசியல் ... தொடர்ச்சி...

எமது இனத்தின் அரசியல் சித்தாந்தத்தை மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றச் செய்ய வேண்டும் என்பதில் தீவிர முனைப்புடன் இயங்கிய அவர், ஓய்வுநிலை ஆசிரியராக வும் மக்கள் பணியாற்றியுள்ளார். அத்துடன் உயிரோடை தமிழில் நேர்காணல்கள் ஊடாக இலங்கை அரசியல் சூழல்களை மிகத் தெளிவாக எடுத்தியம்பியதில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று பல்வேறு அரசியல் தலைவர்கள் மற்றும் அமைப்புகள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## பயங்கரவாதத்திலிருந்து ... தொடர்ச்சி...

பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், தொழிற் சங்கங்கள், இளை ஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அரசை பயங்கர வாதத்தில் இருந்து பாதுகாக்கும் புதிய சட்ட மூலத்தை நீக்குமாறு கோரி சிவில் ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் யாழில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன் கவனயீர்ப்பு போராட்ட மொன்று இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் “அநுர அரசே புதிய பயங்கரவாத சட்டமும் வேண்டாம் பழைய பயங்கர வாதச் சட்டமும் வேண்டாம்” என்ற வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் புதிய சட்ட மூலத்தை நீக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு அனுப்பும் கடிதமும் வாசிக்கப்பட்டது.

“இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களையும் சார்ந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்களான நாங்கள், பயங்கரவாதச் சட்டத்தினால் துன்புறுத்தப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகின மக்களான நாங்கள், போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை பறிகொடுத்துவிட்டு தவித்து நிற்கும் நாங்கள், காணாமலாக்கப்பட்ட உறவுகளை இதுவரை தேடிக்கொண் டிருக்கும் நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒரே குரலில் “பயங்கரவாத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்” வேண்டாம் எனக் கோருகிறோம்” என்று குறித்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்துக்கமைய,சரத்து 19ல் காவல்துறை யினுருக்கு உள்ள அதிகாரம் போல இராணுவத்துக்கும் கடலோர காவல் படைக்கும் சந்தேக நபரை கைது செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதைத் தவிர குறித்த சட்டமூலத்தில் உள்ள சரத்துகளின் ஊடாக ஏற்படக்கூடிய பாதிப்புகளும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தத்தில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவானது மக்களின் கூட்டம் கூடும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துரிமை போன்ற ஜனநாயக உரிமைகளை முடக்கும் ஒன்றாக உள்ளது.

ஏனெனில் காவல்துறை அதிகாரி, இராணுவம், கடலோர காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் ஒரு விடயத்தை பயங்கரவாதம் என்று நம்பினால் அவர்கள் மக்கள் கூட்டம் கூடுவதையும் உரிமைக்காகக் குரல்கொடுப்பதையும் தடுக்க முடியும். அவர்களை கைதுசெய்ய முடியும்.

48 மணித்தியாலங்கள் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லாமல் தடுத்து வைத்து விசாரிக்க முடியும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சுட்டிக்காட்டினர்.

## அனோஜனைச் சந்தித்த... தொடர்ச்சி...

விடுவிப்பது மற்றும் அவருக்கான அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக, இலங்கையின் விசேட சட்டக் குழுவினர் கடந்த 6ஆம் திகதி சவுதி அரேபியாவுக்குப் பயணித்துள்ளனர்.

சவுதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியிலும், அனோஜனை விடுவிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் இந்தக் குழு தனது பணிகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

# சிறுவர் ஆக்கம்

## என் ஓவியம்



ம. கஃபினா
திருகோணமலை

## வறுமை



வயிறு கேட்கும் கேள்விக்கு
விடை இல்லா வீட்டில்,
அடுப்பு கூட அழுகிறது
புகை இல்லாமல்...

ஒரு வேளை சோற்றுக்காக
ஒரு நாள் உழைப்பு,
உழைப்பின் வலி கூட
உணவாகவில்லை...

சிரிப்பை மறந்த முகங்கள்,
கிழிந்த சட்டையில்
மானத்தை மறைக்கும்
ஏழைகளின் கனவு...

வறுமை என்பது
பணம் இல்லாமை அல்ல,
வாழ ஆசை இருந்தும்
வாழ முடியாமை...

சு.திகழினி
கன்னியா

## இசை – ஒரு ஊக்கம்



விழுந்து விட்டாய் என்று
உலகம் சொல்லும் போது,
உன் காதில் மட்டும்
ஒரு பாடலை ஒலிக்க விடு...

அந்த ஒரு தாளம் போதும்,
மீண்டும் எழுந்து நிற்க...

இசை என்பது வெறும் பாடல்
அல்ல,
அது உன் இதயத்தின் துடிப்பு...
துடிப்பு இருக்கும் வரை
தோல்வி என்பதே இல்லை...

உன் வலிகளை எல்லாம்
ராகமாக்கு,
உன் கனவுகளை எல்லாம்
தாளமாக்கு...

நீயே ஒரு இசை,
நீயே ஒரு பாடல்,
நிறுத்தாமல் இசைத்துக்
கொண்டே இரு!

மு.சந்தியா
செல்வநாயகபுரம்

## வாசிப்பின் மகிமை

வாசிப்பு என்பது மனிதனின் அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவுகோல். ஒரு மனிதன் பிறக்கும் போது எதுவும் தெரியாமல் பிறக்கிறான். அவன் கற்றுக் கொள்வது எல்லாம் வாசிப்பின் மூலமாகத்தான். புத்தகம் என்பது நமக்கு கிடைத்த மிகப் பெரிய நண்பன், அது ஒருபோதும் நம்மை கைவிடாது.

நாம் ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது, பல வருடங்களாக ஒருவர் சேர்த்து வைத்த அனுபவத்தை சில மணி நேரத்தில் பெறுகிறோம். உலகத்தைப் பற்றி, வரலாற்றைப் பற்றி, அறிவியலைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வாசிப்பு உதவுகிறது. நிறைய வாசிப்பவர்களுக்கு பேச்சுத் திறனும், எழுத்துத் திறனும் இயல்பாகவே வந்து விடும். புதிய சொற்கள், அழகான வாக்கியங்கள் எல்லாம் நமக்கு பழக்கமாகும்.

இன்று எல்லோரும் கைபேசியில் தான் நேரத்தை கழிக்கிறார்கள். இதனால் மன அழுத்தம் அதிகரிக்கிறது. ஆனால் தினமும் முப்பது நிமிடம் புத்தகம் வாசித்தால், மனம் அமைதியாகும், கற்பனைத் திறன் வளரும், தனிமை கூட இனிமையாகும். நல்ல புத்தகங்கள் நமக்கு ஒரு நல்ல ஆசிரியரைப் போல. தோல்வி வரும்போது எப்படி எழுவது, வெற்றி வரும்போது எப்படி அடக்கமாக இருப்பது என்று புத்தகங்கள் கற்றுத் தருகின்றன.

முடிவாக, சோறு எப்படி உடலுக்கு முக்கியமோ, அதே போல் வாசிப்பு மூளைக்கு முக்கியம். கைபேசி நமக்கு தகவல்களைத் தரலாம், ஆனால் புத்தகம் தான் அறிவைத் தரும். வாசிக்கும் பழக்கம் உள்ள ஒரு சமுதாயம் தான் என்றும் உயர்ந்து நிற்கும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் தினமும் கொஞ்ச நேரத்தை வாசிப்புக்காக ஒதுக்குவோம். ஒரு புத்தகம் ஒரு புதிய உலகத்தை நமக்குக் காட்டும். அந்த உலகத்தில் நாம் தினமும் வாழ்வோம், வாழ்க்கையை அழகாக்குவோம்.



பி.ஹர்சினி
பாலையூற்று


Camera

# தாயகமும் வாழ்வும்


BLUE WHALE HYPERMARKET
KKS ROAD
போதையற்ற வலிவடக்
பாதுகாப்போம்
No Alcohol
வலிவடக்கில்
மதுயானசாலை
அனுமதியை உடனடியாக
நிறுத்து.


கண்டன ஆர்ப்பாட்டம்
சசிதரன் சமரழகியின்
மரணத்துக்கு நீதி வேண்டிய
கண்டனப் பேரணி
இனி ஒரு மரணம்
இப்படி வேண்டாம்!

